# திராவிடநாடு

26-2-61 | வார வெளியீடு | விலை 16 காசு


## வெல்வோம் வாரீர்!

[ கயற்கண்ணன் ]

திராவிடத்தைச் சிறுநாடென் றுரைக்கும் நண்பீர்!
　　திராவிடத்தை விடப்பெரிய நாடு நான்கே!
திராவிடத்தை விடச்சிறிய நாடோ மண்ணில்
　　திக்கெட்டும் நூற்றைம்பத் தாரும்; கேளீர்!
திராவிடத்தின் மக்கள்நாம் பத்துக் கோடி
　　தேளடிமை கொட்டிநிதம் வாடும் போது,
திராவிடத்தை விடச்சிறிய அந்நா டெல்லாம்
　　தித்திக்கும் விடுதலையைச் சுவைத்தல் காணீர்!

கோடியிலே மூன்றேமுக் கால்தான் 'சப்பான்!'
　　கோடியிலே ஐந்தரைதான் 'யாட்டின்' மக்கள்!
கோடியிலே நாலரைதான் 'பிரான்சு'ம்; அந்தக்
　　கோடியிலே ஒன்றரைதான் 'பர்மா' நாடும்!
கோடியிலே ஒன்றேதான் 'மலேயா!' தெற்குக்
　　கோடியிலே நிற்கின்ற 'இலங்கை, மக்கள்
கோடியில்லை! இலட்சத்தில் எண்பத் தாறே!
　　குவலயத்தில் அவர்களெல்லாம் அடிமை அல்ல!

'சிண்டோரா' இலட்சத்தில் பன்னிரண் டரைதான்!
　　சிந்திப்பீர்! 'லெபனு'னே பன்னிரண் டேதான்!
'அண்டோரா' ஐயாயிரச் சொச்சப் பேரே!
　　அதிசயிப்பீர்! எண்ணூற்று எழுபத் தொன்பது
கொண்டேதன் னாட்சிசெயும் நகரம் 'வத்திகான்!'
　　குரங்குப்பிடி யாய்இதனை மறுப்பார் உண்டோ?
தண்டோரா போட்டுஇதை அறிவிப் போம்யாம்;
　　தவறுண்டோ? தயங்காதீர்! வெல்வோம் வாரீர்!

# 'மேற்குவானில் புதிய நட்சத்திரம்'

★ -[அன்பு]- ★

உலக அரசியல் கிழக்காகவும், மேற்காகவும் நடுநிலையாகவும் ஆகப் பிரிந்து நின்று செயல்பட்டு வரும் நிலை ஏற்பட்ட பின்பு, அவை களில் நிகழும் திருப்பங்களையோ, பெரும் கொள்கை மாற்றங்களையோ நாடுகள் அனைத்தும் கவனித்துத் தான் தீரவேண்டும். இவ்வாறு உலக நாடுகளின் பார்வையெல்லாம் சென்ற சில திங்களாக அமெரிக்கா வையே நோக்கியிருக்கின்றன. இது இன்னும் சில திங்கள் நீடிக்கவும் இருக்கிறது.

ஆரம்பிக்காமலே முடிந்த பாரிஸ் சம்மிட் மாநாட்டைக்கூட மக்கள் மறந்தாலும் மறக்கலாம்; ஆனல் அதற்குச் சில நாட்கள் முன்னராக இரஷ்யாவின்மீது பறந்த அமெரிக்க வேவு விமானமான யு. 2-வை யாரும் அவ்வளவு எளிதில் மறந்திருக்க முடியாது. கம்யூனிச நாடுகளின் தலைவர்களும், உலக அரசியல் நடு நிலையாளர்களும்கூட அமெரிக் காவைஅந்நிகழ்ச்சிக்காகக் கண்டித் துக்கொண்டிருக்கும் நேரத்தில் அமெரிக்காவிலிருந்தே ஒரு குரல் "தவறு தவறுதான்" என்று ஒலித் துக் காட்டியது. அதோடு மட்டு மல்ல, அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் சரிவுக்கே யு. 2 போன்ற பல வேண்டத்தகாத கொள் கைகளும் திறமையற்ற நிர்வாகமும் தான் காரணம், என்ற குற்றச் சாட்டைத் தேர்தல் அறிக்கையின் ஒரு முக்கிய பகுதியாகவே வைத்து, வெற்றியும் பெற்று, ஆட்சிப்பொறுப் பையும் கைப்பற்றியிருக்கிருர் ஜான் கென்னடி."அமெரிக்காவின்'வெள்ளை மாளிகை' இளைஞர்களை வளர்க்கும் ஒரு 'ஆயா பள்ளிக்கூடம்' அல்ல" என்று கென்னடியின் இளமைப் பருவத்தைப் பார்த்துக் கேலிபுரிந்த ரிச்சார்டு நிக்சனும் அவரது கட்சி யும் தோல்வியுற்றதோடல்லாமல், அவர்களின் வியப்பையும் தூண்டி விட்டு, இன்று அதே வெள்ளை மாளி கைக்குள் குடியேறிவிட்டார் அந்த இளைஞர். இனி உலக அமைப்பில் சுமார் மூன்றில் ஒரு பகுதிக்குமேல் அவரது கொள்கைப்படி இயங்கிவரப் போகிறது.

உலகம் இன்று, கம்யூனிச நாடு கள், கம்யூனிசம் அல்லாத நாடுகள் என்ற இருபெரும் பிளவாகப் பிரிந்து கிடக்கிறது. கம்யூனிச நாடுகளை யும் நடுநிலை வகிக்கும் ஒருசில நாடு களையும் நீக்கி, ஏனைய அனைத்தை யும் "சுதந்திர உலகு" என்ற பெய ரில் தனது அணைப்பில் வளர்வித்து வருகிறது அமெரிக்கா. முதலா ளித்துவத்தை வளரவொட்டாமல் தடுப்பதே எங்களது முக்கிய வேலை என்று கூறிக்கொண்டு கம்யூனிச நாடுகள் நாளும் தங்கள் கொள் கைக்கு இடமும் மதிப்பும் தேடி வரு வதில் முனைகின்றன. இதற்கிடை யில் 'நடுநிலைமை' என்ற பெயரில் ஒருசில நாடுகள். எனவேதான் தற்போதெல்லாம் அமெரிக்காவின் ஜனதிபதி தேர்தலோ, இரஷ்யப் பிரத மரின் புதுக் கொள்கை அறிவிப்போ உலக நாடுகளின் கவனத்தையும் இயக்கத்தையும் பாதிக்கும் அள வுக்கு, இலங்கைக்கு ஒரு பெண் பிரதமராக வருவதோ, நேபாளத்தில் மன்னராட்சி பிரகடனப்படுத்து வதோ இருப்பதில்லை. ஆனல், பெரும் பாலும் உலக நாடுகளின் இயக்கத் தில் அமெரிக்காவோ அல்லது இரஷ் யாவோ நேர்முகமாக அல்லது மறை முகமாகக் கலந்துகொள்ளாத நிலை யும் இருப்பதில்லை. இது யாரும் வேண்டிப்பெற்ற நிலைமை அல்ல; உலக நாடுகள் பெற்றுள்ள அரசி யல் சாபம். இதிலிருந்து உற்பத்தி யானதுதான் இன்று உலக அமை தியை மறைமுகமாகக் குலைத்து வரும் 'கெடுபிடிப்போர்' என்ற கேடு.

கம்யூனிசத்தைத் தடுக்கிறேன் என்று கூறிக்கொண்டு அமெரிக்கா தனது கைகளை நீளத்திலும் அகலத் திலும் பரப்பிக்கொண்டிருக்கிறது. முதலாளித்துவத்தை நிறுத்துவதே எனது உயிர்க்கொள்கை என்று சொல்லிக்கொண்டு இரஷ்யாவும் அதன் சார்பு நாடுகளும் அல்லும் பகலும் பாடுபட்டுவருகின்றன. முன்னதற்குப் பல நாடுகள் பின் பலம். பின்னதற்குப் பல நாடுகள் பக்கத்துணை. அரசியலா, பொருளா தாரமா, கலையா, கல்வியா, எது என்றாலும் ஒன்றை ஒன்று இந்தக் கண்களோடு நோக்கிக்கொண்டு, இதே அடிப்படையில்தான் இயங்கி வருகின்றன. எனவேதான் ஜப்பா னில் குழப்பமென்ருல் அமெரிக்கா என்ன சொல்லுகிறது என்பதுதான் எல்லோரது முதல் நோக்கமாக உள் ளது; போலந்து ஏதாவது கொள்கை மாற்றங்கள் செய்ய எண்ணிஞல், இரஷ்யா என்ன கூறுமோ என்பதை முதலில் நினைக்கவேண்டியிருக் கிறது. கோஷ்டியில் சேர்ந்துள்ள வற்றின் நிலை இது. காங்கோபோன் றிருந்தால் யார் வலை முன்னது என்ற கேள்வியில் இரண்டினுக்கும் போட்டி, கெடுபிடிப்போர்; முடிவு காங்கோவின் இன்றைய நிலைமை.

உலக அரசியல் இப்படி இருக்கும் நிலையைப் பெற்றிருப்பதால்தான் இன்று அமெரிக்காவின் கென்னடி உலகின் மூலை முடுக்குகளிலெல் லாம் பேசப்படுகிருர். ஐசனேவரின் பதவிக்காலம் முடிவதை அவருக்கு முன் உலக மக்கள் கணக்கெடுத்து வைத்திருக்கிருர்கள்.

ஐசனேவரது ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை பெரும் சரிவைத்தான் சந்திக்கநேர்ந்தது, என்ற ஒரு கோட் பாடு எந்த அரசியல் வாதியினுடை யதுமல்ல; அந்த அரசாங்கம் மேற் கொண்டு நடத்திய 'கணக்கெடுப்'பி னின்றும் வெளிவந்த முக்கியக் குற்றச்சாட்டு. ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, தூரக்கிழக்கு முதலிய பகுதி களிலெல்லாம் அமெரிக்காவின் பொதுவான வெளிநாட்டுக்கொள்கை ஏதோ ஒருவித எதிர்ப்பையோ தோல்வியையோதான் சந்திக்க நேர்ந்தது. தென் கொரியா, ஜப்பான், துருக்கி, எகிப்து, காங்கோ, கம்போடியா, லாவோஸ் இவையெல்லா வற்றுக்கும் அதிகமாக க்யூபா போன்ற நாடுகளிலெல்லாம்அமெரிக்காவின் மதிப்பே

( 4-ம் பக்கம் பார்க்க )

# போதுமா பெரம்பூர் மட்டும்?

[19] ஆண்டு சந்தா ரூ. 8 (26—2—61) தனிப்பிரதி 16 காசு [இதழ் 31

இங்கிலாந்து நாட்டு அரச தம்பதிகள், இத்துணைக் கண்டத்துக்கு வருகைதந்து இங்குள்ள அனைவருக்கும் மகிழ்வூட்டினர். பிரதமர் நேரு அவர்கள் முதல் சாதாரண மக்கள்வரை எல்லோருமோ, அரசகுடும்பத்தினரை வரவேற்பதில் பெரும் ஆர்வமும் அன்பும் காட்டினர். துணைக்கண்டம் முழுவதுமே விழாக்கோலம் பூண்டிருந்தது. இந்நிகழ்ச்சி, குறிப்பாக தமிழக மக்கள் அரச தம்பதிகளை வரவேற்ற முறையும் அதன் வாயிலாக ஏற்பட்ட குதூகலமும் மற்ற மாநிலங்களில் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு தமிழ் மக்கள் தங்களின் பண்பின் சிறப்பைக் காட்டிக்கொண்டனர்.

ஆனால், தமிழக மக்களால் தங்கள் மரபின் சிறப்பினைக் காட்டிக்கொள்ள முடிந்த அளவுக்குப் புதுமைகள் எதனையும் காட்டமுடியவில்லை. பெரம்பூரிலுள்ள இரயில் பெட்டித் தொழிற்சாலையைத் தவிர, வேறெதனையும் "இது எங்கள் நாட்டின் புதுமை'' என்று வந்த விருந்தினருக்கு காட்டி மகிழத்தக்க நிலையில் நாம் இல்லை.

நம்முடைய மாநிலத்தில் புதுமைகள் உண்டாக்கக் கூடிய வாய்ப்புகள் பல இருப்பினும், அவை உருவாக வழிகோலும் அதிகாரம் நம்மிடம் இல்லை. அதனால், வளம்பல உண்டாக்கும் வழிவகைகள் இருந்தாலும், இல்லாதவர்களாக இருக்கின்ற இரங்கத்தக்க நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். எனவே, இருக்கின்ற ஒன்றையே எவர் வந்தாலும் இட்டுச்சென்று காட்டித் திருப்திகொள்ளவேண்டியிருக்கிறது.

யார் வந்தாலும் சரி, அவர்களைப் பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு அழைத்துச் சென்று காட்டி விட்டால் பெருமை ஏற்பட்டுவிடும் என்று கருதுகின்றனர் போலும் ஆளவந்தவர்கள். வந்தவரே திரும்பத் திரும்ப வந்தாலும் காட்டிய அதே இடத்தையே காட்டி மனத்திருப்தி கொள்ளுகின்ற நிலையில் நமது மாநிலம் இருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்னர் எடின்பரோ கோமகன் வந்தபோது பெரம்பூரைக் காட்டிப் பெருமையுற்றனர். இன்று அவர் அரசியுடன் வந்தபோது அதே பெரம்பூர்தான் காட்சிக்கான இடம்! பார்த்த அதே இடத்தை மீண்டும், பார்க்கவேண்டுமா என்றோ என்னவோ இம்முறை அரசி அங்கு செல்ல, கோமகன் அதே நேரத்தில் வேறிடத்திற்குச் சென்று வந்தார்—தனிப்பட்டவர் நிறுவனத்திற்கு.

எத்தனை நாளைக்கு, எத்தனை பேருக்குப் 'பெரம்பூர், பெரம்பூர்' என்று மட்டும் காட்டிக்கொண்டிருப்பது? போதுமா பெரம்பூர்? வேறு தொழிற்கூடங்கள்—ஆலைகள்—அமைப்புக்கள்—அணைகள் வேண்டாமா? ஏற்படுத்துகின்றீர்கள் எத்துணையோ—அதிலே ஒன்றேனும் இங்கு இருத்தல் ஆகாதா? இங்கிருப்பவர்களும் மக்கள்தாமே? இவர்களிடமும் வரி வாங்குகின்றோம் அல்லவா? என்றெல்லாம் இன்றைய தினம் எங்கும் எவரும் கேட்க, குமுறக், கொதிக்கக் காணுகின்றோம்.

ஆந்திரமாயினும், கேரளமாயினும், கருநாடகமாயினும் ஆகாது இந்த அநீதி என்று துணிந்து கூறிடுவதைக் கேட்கின்றோம்.

ஆனால், நாளிதழைப் பிரித்தால் தென்னகத்திற்கு 'இல்லை இல்லை' என்ற செய்தியே எங்கும் இருந்திடக் காணுகின்றோம். பாராளுமன்றத்திலும் இதே பதில் பல்லவியாகி வருகிறது.

'சென்னையில் இரும்புத் தொழிற்சாலை நிறுவுவது பற்றிப் பரிசீலனை' என்று தலைப்பிலே செய்தி; இதைப் படித்து முடிப்பதற்குள் அதற்குக் கீழே 'ஆனால் முடிவு எடுக்கப் பல மாதங்கள் பிடிக்கும்' என்ற அபாய அறிவிப்பு. பல மாதங்கள், பல ஆண்டுகளாகி இல்லை என்று ஆகிவிடுமோ என்ற அச்சம்—இப்படி ஒரு செய்தி ஆவலைத்தூண்டி ஆயாசத்தைத் தருகின்றது.

வேறு ஒரு செய்தி வேதனைக்கிடமாகிறது. இரண்டு நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் 'தென்னாட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இல்லை என்று திட்டவட்டமாக, தீர்மானமாக அறிவிக்கிறார் அமைச்சர் மாளவியா. சுத்திகரிப்பு நிலையம் ஏதேனும் இருக்கிறதா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கான விடையல்ல, தகவல் அல்ல அது—'ஏற்படுத்த இருக்கிறீர்களா?' என்று கேட்டதற்கே 'இல்லை' என்று அறிவிக்கின்றனர். அதிகாரம் இன்று அவர்களிடம் அல்லவா, அதனால்!

இரயில்பாதையானாலும் சரி, இரசாயனத் தொழிற்சாலையானாலும் சரி, தொழிலாயினும் சரி, எழிலாயினும் சரி எதுவும் வடக்கில்தான், என்ற நிலை நாளுக்குநாள் நீடித்துக்கொண்டே போகின்றது.

இங்கிருப்போரோ 'எங்கிருந்தால் என்ன?' என்று கூறும் போக்கினராக உள்ளனர். இந்த நிலை நல்லது தானா? போதுமா பெரம்பூர்மட்டும்?

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு குறிப்பிட்ட அளவு வீழ்ச்சியடைந்தது என்றுதான் சொல்லவேண்டும். குறிப்பாக ஜப்பானிலும் இலத்தீன் அமெரிக்காவின் சில பகுதிகளிலும் முறையே ஐசனோவரும். அவரது துணையாளர் ரிச்சார்டு நிக்சனும் தங்களின் தனிப்பட்ட அந்தஸ்தையே ஓரளவுக்கு இழக்க நேர்ந்தது. இரஷ்யா பல வகைகளில் போட்டிபோட்டு முன்னேறும் அளவுக்கு அமெரிக்காவைப் பல துறைகளிலும் பின்னிலையில் வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு ஐசனோவரது ஆட்சிதான் பொறுப்பு என்ற ஒரு எண்ணம் இன்று அமெரிக்கர்கள் எல்லோரது உள்ளத்திலும் நிலவி வருவதை அவர்களே வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார்கள். **சமீப காலம் வரையில், உலகின் ஒரே பெரும் சக்தியாக இருந்த அமெரிக்கா, ஐசனோவரின் கடைசி நாட்களில், உலகின் இருபெரும் சக்திகளுள் ஒன்று என்ற நிலைக்கு வந்தது.** இந்தக் கசப்பான உண்மையை அமெரிக்காவைப் பின்பற்றும் நாடுகளே மறுக்காமல் ஒப்புக் கொள்ளுகின்றன.

ஐசனோவர், தனது ஆட்சிக் காலத்தில் செய்த மகத்தான செயல்களுள் ஒன்று, பெரும் உலகப்போர் மூளுவதற்கான சூழ்நிலைகள் அநேக தடவைகள் வந்தபோதெல்லாம், அதை நிறுத்தி வைப்பதற்கு ஒத்துழைப்பைத் தந்து முயற்சித்ததுதான் இன்று எல்லோராலும் அரசியல், நாடு என்ற பாகுபாடுகளாகாமல் போற்றப்படுகிறது.

ஆனால், இனித் தீர்த்து வைக்கப்படவேண்டிய பல பிரச்சினைகள் மட்டும் நிறைய வைத்துவிட்டுப் போயிருக்கிறார் ஐசனோவர். சீன நாளிதழான ‘பீப்பிள்ஸ் டெய்லி’ கேலிச் சித்திரம் வரைந்து காட்டியிருப்பதுபோலக் கென்னடியின்முன், மலை போன்றுள்ள தீர்க்கப்படவேண்டிய விவகாரங்கள் ஐசனோவர் அவருக்குத் தந்துவிட்டுப்போன ‘சொத்துக்கள். **அல்ஜீரியா, காங்கோ, ஐ. நா. வில் சீனா நுழைவு, லாவோஸ், க்யூபா போன்ற ‘தலைவலி’கள் இன்று** கென்னடியின் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் ‘க்யூபா’ தலையாய ஒன்று! ஏனெனில், அமெரிக்காவின் உறவு க்யூபாவில் மட்டும் தனிப்பட்ட வகையைச் சேர்ந்தது; வெளிநாட்டுக் கொள்கையும் உள்நாட்டுக் கொள்கையும் இணைந்து செயல்படவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் க்யூபாவைப் பொறுத்த வரையில் அமெரிக்காவுக்கு இருக்கிறது. உலகின் மாபெரும் சக்திகளுள் ஒன்றான அமெரிக்கா க்யூபாவிடம் மட்டும் சிறிது எச்சரிக்கையுடனும் கவனிப்புடனும செயல்படவேண்டிய நிலை இன்று உருவாகிவிட்டது. தங்கள் நாட்டின் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுச் சென்ற சிலரைப்பற்றி அமெரிக்கர்கள் இவ்வாறு கேலியாகக் குறிப்பிட்டுப் பேசிக்கொள்வார்களாம்: **பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் ஜனாதிபதி என்பவர் எவ்வளவு திறமைமிக்கவராக இருக்கவேண்டும் என்பதை நிருபித்துக் காட்டினார்; ட்ரூமன், யாருமே ஜனாதிபதியாக வரலாம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு; ஆனால் ஜனாதிபதி என்ற பதவியே தேவையற்றது என்பதை ஐசனோவர் ஆட்சிக் காலம் வெளிப்படுத்திவிட்டது!** இது கேலிப் பொருள் மட்டுமே கொண்ட மதிப்பீடல்ல. அமெரிக்கர்கள் எத்தனை காரணங்களை உள்ளடக்கி இப்படிக் கூறினார்களோ; ஆனால் யு. 2. விவகாரத்தில் ஐசனோவர் பதவி வெளியிட்ட பொறுப்பற்ற தன்மையும் ஒரு சில அதிகாரங்களைச் சரிவர உபயோகிக்காத போக்கும் மேற்கண்ட அவரைப்பற்றிய கூற்றுக்கு ஒரு காரணமாக அமையும்.

இப்போது அமெரிக்காவில் நிகழ்ந்திருப்பது ஒரு கட்சி இன்னொரு கட்சிமீது கொண்ட வெற்றி மட்டுமல்ல; ஒரு வகையான அரசியலமைப்பு முடிந்து மற்றொரு வகையான அரசியலமைப்பின் பதவியேற்பின் ஆரம்பம். ஒன்றன் முடிவு, மற்றதன் ஆரம்பத்தில் கொண்டு சென்றிருக்கிறது. அமெரிக்காவின் ஜனாதிபதிகளுள் அதிக வயதான ஐசனோவரிடமிருந்து மிகக் குறைந்த வயதுள்ள ஜான் கென்னடி பொறுப்பேற்றிருக்கிறார். எட்டாண்டுக் காலமாக ஆட்சி புரிந்து வந்த குடியரசுக் கட்சியை அப்புறப்படுத்தி, ஜனநாயகக் கட்சி தனது பிரதிநிதியை மக்கள் ஒத்துழைப்புடன் உலக மதிப்பைப் பெற்ற அமெரிக்கத் தலைவர் பதவிக்கு அனுப்பியிருக்கிறது.

அமெரிக்கர்களே! நாடு நமக்கு என்ன செய்யும் என்று நீங்கள் கேட்கக்கூடாது; நாட்டுக்கு நாம் என்ன செய்யலாம் என்று கேட்டுக் கொள்ளவேண்டும்.

உலக மக்களே! அமெரிக்கா உங்களுக்கு என்ன செய்யும் என்று கேட்காதீர்கள்; நாம் எல்லோரும் சேர்ந்து மனித சுதந்திரத்துக்காக என்ன செய்யலாம் என்று வினவுங்கள்.

அதிக மக்களுள்ள ஏழை சமுதாயத்துக்குஉதவவில்லையெனில், ஒரு சிலராகவுள்ள செல்வர்களை நாம் காப்பாற்ற முடியாது.

பயத்தோடு நாம் (நாடுகளோடு) சமரசம் பேசவேண்டாம்; அதே போது சமரசம் மேற்கொள்வதற்கும் பயப்படவேண்டாம்.

இருவரும் (இரஷ்யா, அமெரிக்கா) சேர்ந்து விஞ்ஞானத்தின் துணைகொண்டு அபாயத்தைத் தோற்றுவிக்க வேண்டாம்; ஆச்சரியங்களை விளைவிப்போம்.

நாடுகளோடு நாம் போர் தொடுத்துக் கொள்ளவேண்டாம்; பஞ்சம், வியாதி, ஏகாதிபத்தியம் போர் முதலியவற்றின்மீது நாம் போர் தொடுப்போம்.

என்பன போன்ற கென்னடியின் முழக்கங்கள் அவரது சொல் திறமையும், கொள்கை விளக்கத்தையும் மட்டும் விளக்குவனவாக அமையவில்லை; உலக மக்கள் அனைவருக்கும் எழுப்பப்பட்ட அறிவுரைகளாகவும் அமைந்திருக்கின்றன.

ஆயுதநிராகரிப்பு, கூட்டு ஒத்துழைப்பு போன்ற அடிப்படைக் கொள்கைகளிலும் தனக்குள்ள பிடிப்பையும் ஆழத்தையும் தனது முதற் சொற்பொழிவில் காட்டியிருக்கிறார் கென்னடி.

( 13-ம் பக்கம் பார்க்க)

**விற்பனையாளர்கள் தேவை**

தென்னவனின் ஏடுகள்

1. **என் வரலாறு** (கதை)
50-புதுக் காசு
*(பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையாரின் முன்னுரை கொண்டது.)*

2. **இளங்கோ** (கதை)
50-புதுக் காசு
*(பன்மொழிப் புலவர் ப.சுந்தரவேலனாரின் முன்னுரை கொண்டது.)*

**செல்வன் வெளியீடு**
*31.* குருவப்பச் செட்டித் தெரு
சென்னை-2.

# சம்பத் உண்ணுநோன்பு

# அண்ணா அறிக்கை

அண்மையில், கழகத்தில் ஏற்பட்ட நிலைமைகளைத் திருத்தி ஒருமைப்பாடும், தோழமையும் கழகத்தில் ஏற்பட வேண்டும்—அப்போதுதான் கழகம் மேற்கொண்டுள்ள தூய நோக்கம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் நான் தோழர் சம்பத்துடன் கலந்து பேசியதும், அறிக்கைகள் வெளிவந்ததும் அனை வருக்கும் தெரியும்.

அதற்குப் பிறகு, பேதமும் பிளவும், பேச்சிலும் எழுத்திலும் பலர் ஈடுபட்டு வளர்த்ததை நாம் கட்டுப்படுத்த முடியாமற்போயிற்று. அதனையடுத்து நம்மையெல்லாம் திகைக்கவைக்கத்தக்க—நாம் எல்லாம் வருந்தத்தக்க—வன்மையாகக் கண்டிக்கத்தக்க செயல் திருச்சியில் நடைபெற்றது.

நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறபடி, இந்தச் சம்பவம், என்னுடைய பொது வாழ்வுக்கே ஒரு இழுக்கு என்று எண்ணி நான் வேதனைப்படுகிறேன்.

வன்முறைகள் கழகத்தின் நடவடிக்கைகளிலே புகுந்துவிடுமானால், எவரும் சகிக்கமுடியாத இழிவையும், அதை அடுத்து அழிவையும் கழகத்திற்கு ஏற்படுத்திவிடும் என்ற எண்ணத்தினாலும், கழகத்தில் இந்த நிலை களையப்பட்டு, கழகம் தூய்மைப்படுத்தப்படவேண்டும் என்று தமது அறிக்கை மூலம் தெரியப்படுத்தி, தோழர் சம்பத் உண்ணாவிரதம் மேற்கொண்டது என் மனத்திற்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. தன் கருத்தையும், முடிவையும் சம்பத் என்னிடம் தொலைபேசி மூலம் தெரிவித்தபோதே நான் திடுக்கிட்டுப்போனேன்; வேண்டாமென்று மன்றாடினேன்—ஆனால், இது தவிர வேறு தகுந்த முறையில்லை என்று தன் உறுதியைத் தெரிவித்துவிட்டு, தோழர் சம்பத் உண்ணாவிரதம் இருந்துவருகிறார்.

இந்த நிலைமை நமது கழகத் தோழர்களை மட்டுமல்லாமல், எவரையுமே கலங்கவைப்பதாகும். இந்த நிலைமையை நாம் அனைவருமே இதயபூர்வமாகப் பாடுபட்டு மாற்றியாகவேண்டும் என்று எண்ணாத கழகத் தோழர் எவருமே இருக்கமுடியாது.

நேற்று, நான் சம்பத்தை வந்து பார்த்தேன்—பேசினோம். எவ்வளவு வேதனையை அடக்கிக்கொண்டு அந்தப் பேச்சு நடந்திருக்குமென்பதை நான் கூறத் தேவையில்லை. எவரும் உணருவர். இன்று காலையும் பார்த்தேன்—பேசினோம்.

தன் நோக்கம், கழகம் தூய்மைப்படுத்தப்படவேண்டும் என்பதுதான் என்று கூறிக், கழகத்தில் ஏற்பட்டுள்ள பகைஉணர்ச்சி, கசப்புணர்ச்சி ஆகியவை பற்றிக் கழக முக்கியஸ்தர்கள் கூடிப் பேசி நிலைமை சீராக்கப் படுவதற்கான திட்டம் வெளிப்பட்ட உடன் தனது உண்ணாவிரதத்தைக் கைவிட இயலுமெனும் கருத்தைத் தோழர் சம்பத் தெரிவித்தார்.

எனவே, உடனடியாகத் தனிக் கூட்டமொன்றினைக் கூட்டத் தீர்மானித்திருக்கிறேன். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் சீரிய முடிவுகளைக் கண்டு, தோழர் சம்பத் உண்ணாவிரதத்தைக் கைவிடுவார் என்று நம்புகிறேன்.

இது, நாள் கணக்கில் யோசித்துக்கொண்டிருக்கக்கூடிய பிரச்சினை அல்ல. உடனடியாகக் கவனித்துத் தீர வேண்டியது. எனவே, இந்த அறிக்கையையே, அந்தக் கூட்டத்துக்கான அழைப்பாக, பொதுக் குழுவில் உள்ளவர்களும், கழக எம். எல். ஏ., எம். எல். சி.-க்களும் கொள்ள வேண்டுகிறேன்.

நெஞ்சம் திடுக்கிடும் நிலைமையைச் சீர்படுத்த, வேதனையுடன் துடிதுடித்துக்கொண்டிருக்கும் எனக்குச் சீரிய யோசனைகளைக் கூறி தக்கதோர் வழிவகுக்க, 'உடனே வருக' என்று கேட்டுக்கொள்கிறேன். அழைப்புகளும், அவசரத் தந்திகளும் அனுப்புகிறேன்.

சென்னையில், கூட்டம் 26—2—61 ஞாயிறு காலையில் நடைபெறும். அதற்கான இடம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

நான் மேற்கொண்டுள்ள இந்த முயற்சிக்குச் சீரிய ஒத்துழைப்புக்கொடுத்து, நம்அனைவருக்கும் கலக்கத்தைக் கொடுத்துள்ள உண்ணாவிரதத்தை சம்பத் விட்டுவிடுவதற்கான தக்க முடிவுகளை, கூட்டவாயிலாக ஆக்கி அளித்தருளக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை

பொதுச்செயலாளர், தி. மு. க.

சென்னை,
24—2—'61.

# குமுறும் எரிமலை

[எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.]

## உயிர் வாதை

"கல்லூரிக் கட்டிடத்திலேயிருந்து மேற்குப்புறம் பார்த்துக் கொண்டிருந்தேன். பருவ மங்கை யொருத்தி, மெள்ள வருவது தெரிந்தது. இளமையின் மெருகு உடலில் — ஏழ்மையின் சின்னம் உடையில்! தெருவிலே நடந்துவந்தாள், தட்டுத்தடுமாறி, நடுக்கும் குளிரில்! பனிக்கட்டிகள், பாளம் பாளமாக அவளது உடலெங்கணும் படிந்தன. முகத்திலே மிரட்சி — கால்கள் தடுமாறின. அப்படித் தள்ளாடித் தள்ளாடி வரக் காரணமென்ன, உடல் நலமில்லையா, குடிவெறியிலே இருந்தாளா, நானறியேன்.

பச்சாதாப உணர்வு எழுந்தது, எனது உள்ளத்தில்—ஆனால் மற்ெறாரு பக்கம் மகிழ்ச்சி, திருப்தி! ஆம், அவள் ஒரு வெள்ளைக்காரி என்பதால்! இந்த உணர்வுகளுக்கிடையே நான், ஊசலாடினேன்.

தடுமாற்றம் நின்றுவிட்டது — இப்போது அவள் பனிக்கட்டிகளுக்கிடையே வீழ்ந்துவிட்டாள். உயிருக்காக அவள் போராடுவது தெரிந்தது. ஒருநாள், அவள் வளர்த்ததாக இருக்கக்கூடும், அவளைச் சுற்றிச் சுற்றி வந்தது— பாவம் என்ன செய்யும்! அவளோ அமைதியானாள்; மூச்சு நின்றிருக்கக்கூடும். நானோ, இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை— போலீசுக்கு டெலிபோன்மூலம் செய்தியறிவித்துவிட்டுக், கடமை முடிந்தது என எண்ணிக்கொண்டேன்"

எந்தக் கதையிலே வருகிற கட்டமிது — யாரந்தக் கல்நெஞ்சன் — உயிர்போகிறபோதும் உள்ளம் நெகிழாமல், இருந்த இடம்விட்டு நகராமல் ஏனோதானோ என்றிருப்பவன் —அவனென்ன வில்லனோ — அந்தக் காரிகைதான் யார், அவளிழைத்த கொடுமை என்ன, அவள் தன் சோகக்கதையென்ன, கொட்டும் பனியில், நடுக்கிடும் குளிரில், துணையேதுமின்றி அவள் தனிவழியே வந்திடக் காரணமென்ன — இந்த அளவு சுவையான, உருக்கமிக்க காட்சியினை உருவாக்கித் தந்த அந்தக் கதாசிரியர் யார் எனக் கேட்டிடத் தோன்றும், இந்தப் படப்பிடிப்பினைக் கண்ணுறுகிற எவருக்கும்!

ஆனால், இது கதையிலே வருகிற கட்டமல்ல, காட்சியல்ல—உண்மை நிகழ்ச்சி!

கல்லூரிக் கட்டிடத்திலேயிருந்து, ஆடாமல் அசையாமல், எந்தவொரு உதவியும் செய்திட மனமில்லாமல், பரிதாப உணர்வுக்கும் புளகாங்கிதத்துக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருந்தவரும் சாதாரண மனிதரல்ல — அமெரிக்காவிலுள்ள ஒரு கல்லூரியின் பேராசிரியர், சாண்டர்ஸ்ரெட்டிங் என்பார்!

*

இருக்காது, இருக்காது, யாரோ ஒருவர், அந்தப் பேராசிரியர்மீது மனமாச்சரியம் கொண்டவர், அவர் தம் பெயருக்கு இழுக்குத் தேட வேண்டும் எனும் நோக்கத்தோடு, தந்த படப்பிடிப்பாக இருக்கக்கூடும் —கல்லூரியின் பேராசிரியரா அவ்வாறு நடந்திருப்பார், அவ்வளவு வன்னெஞ்சத்தினராக இருந்திருப்பாரா, என்றுகூட எண்ணத் தோன்றும் நம்மில் சிலருக்கு!

ஆனால், அத்தகைய ஐயத்திற்கு இடமேதுமில்லை — காரணம், இந்தப் படப்பிடிப்புத் தரப்படுவது அதே பேராசிரியரால், ''அமெரிக்காவில் நீக்ரோவர் வாழ்க்கை'' என்ற நூலில்!

என்ன இருந்தாலும் அந்தப் பேராசிரியர் செய்தது தவறுதான்—உயிருக்குப் போராடுகின்ற வேளையில், வேறுபாடும் வெறுப்புணர்ச்சியும் மறைந்திடவேண்டாமோ, மனித இதயம் வெளிப்படவேண்டாமோ, மாச்சர்யம்மறைந்திடவேண்டாமோ, ஓடோடிச் சென்று அந்த வனிதையைக் காப்பாற்றியிருக்கவேண்டுமே அவர், அதுவன்றோ மனிதப்பண்பு, என்போம் நாம்!

அவரும் மனித இதயம் படைத்தவர்தான்; ஈரநெஞ்சினர்தான், நம்மைப்போல்!

## அன்று பட்ட அவதி

ஆனால், அவரது இனம், அவர்தம் மூதாதையர் ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகளாக, வெள்ளையரிடத்தே அனுபவித்த கொடுமைகள், நாயினும் கேடாய் நடத்தப்பட்ட காட்சிகள், அவைபற்றிய கதைகள், வரலாறுகள் அத்தனையும் அவருள்ளத்தே மாறாமல், மங்காமல், மறையாமல் இருந்தன, எப்போதும்!

காட்டு மிருகங்களை வேட்டையாடி, அவற்றைத் தீயிலிட்டும், இடாமலும் பொசுக்கித் தின்று, கனி வகைகளைப் புசித்து, மர நிழலிலே வாழ்க்கை நடாத்தி வந்தனர், அவர் தம் மூதாதையர், ஆப்ரிகாவில்! மிருகத்தினும் கேடான வாழ்வுதான்— நாகரிகம் சிறிதேனும் வளர்ந்திடவில்லை அவர்களிடத்தே என்பதும் உண்மைதான் — ஆனால், உரிமை இருந்தது, கட்டுப்படுத்த எவருமில்லை, இவ்வழி செல், அவ்வழி செல்லாதே, அதைப் பெறு, இதைப் பெறாதே, என்று கட்டுப்படுத்த மாற்றார் ஒருவருமில்லாத நிலை!

அங்கிலேயரிலிருந்தோரை ஆசை காட்டியும், அச்சுறுத்தியும், காட்டு மிருகங்களைக்கண்ணிவைத்துப்பிடிப்பதைப்போல், துப்பாக்கிகொண்டு பயமுறுத்தியும், கப்பலேறச் செய்தனர் வெள்ளையர்கள்! கப்பல் கப்பலாக நீக்ரோவர்கள் இறக்குமதி செய்யப்பட்டனர், அமெரிக்காவில்!

ஏன்? பாவம்! காட்டு விலங்கெனத் திரிகின்றனரே, வெளியுலகம் தெரிந்திடவில்லையே அவருக்கு; நாகரிக வாடையே வீசிடவில்லையே அவ்வினத்தாரிடம், அவர் தமக்கு வாழ்வளித்திடுவோம், வாழ வகை செய்வோம், உலகியலை உணர்த்துவோம், நாகரிகம் படைத்தவர்களாகமெள்ள மெள்ள அவர்களை ஆக்கிடுவோம், நம்மோடு சரிநிகர் சமானமாக வாழ வைப்போம் என்ற நல்ல எண்ணத்தோடு செய்தார்களா? செய்வார்களா?

வெள்ளையரின் நோக்கம் வேறு. தென் அமெரிக்காவிலிருந்து காடு களை வெட்டிக் கழனியாக்கவேண் டும்—காபியும், தேயிலையும் மற்றும் பல பொன் கொணரும் பயிர்களும் விளைத்திடவேண்டும் — அதற்கென உழைப்பு, அயராத உழைப்பு, அஞ் சாத தன்மை, காட்டுவிலங்குகட்கும் கொதிக்கும் வெய்யிலுக்கும் ஈடு கொடுத்திடும் திறம் வேண்டும் — அத்தகு திறம்மிகுந்தோர் நீக்ரோவர் என்பதாலே தேடிப்பிடித்தனர், அடிமைகளாக விற்றனர் அமெரிக் காவில்!

அவர்களது உழைப்பு, ஊதியம் தந்தது வெள்ளையருக்கு—அவர்கள் சிந்திய வியர்வை, கொட்டிய குருதி நல்ல கழனிகளாக உருவெடுத்தது; கல்லும் கள்ளியும் இருந்த இடத்தே, கூடகோபுரங்கள் எழுந்தன—அனைத் தும் வெள்ளையருக்குத்தான், அந்த அப்பாவி நீக்ரோவருக்கல்ல! அவ ருக்கு மீதம் பெருமூச்சு! எதிர்த்துப் பேசிட முடியாத நிலைமை, நாயினும் கேடான வாழ்வு, நீக்ரோ பெண்டிர் பலரின்மானம் பறிக்கப்பட்டபோதும் வாய்திறக்க முடியாத பரிதாபகர மான கட்டங்கள்; வெள்ளையரோ, அடிமைகளை எங்ஙனம் நாங்கள் நடத்தினும் கேட்க யார் என்று மமதையோடு பேசினர் — அரசு, தட்டிக் கேட்கவில்லை, ஆண் டாண்டுகாலமாக!

தாங்கொணாத அந்தக் கொடுமை களினின்று தங்கட்கு விடிவுகாலம் எப்போது கிட்டும், எப்போதுகிட்டும் என்று ஏங்கிக்கிடந்தனர், நீக்ரோ வர். அவர்களால் இயன்றதும் அவ்வளவுதான். ஏனென்று கேட் டால் கசையடி, எதிர்த்துப் பேசி னால் பட்டினி, ஊமையராய், குருட ராய், செவிடராய், உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாய் இருந்தால்தான் அரை வயிற்றுக் கஞ்சியாவது கிடைக்கக்கூடும், இல்லையெனில் அதற்கும் ஆபத்து என்னும் நிலை இருக்கும்போது, வேறென்ன செய்ய இயலும், அந்தப் பரிதாபத்துக் குரியோரால்! காணும் பொருளெல் லாம் அவர்தம் கைவண்ணம்—எனி னும் அவர்கள் கண்டது வறுமை, பூண்டது பொறுமை!

### சுழலும் சக்கரம்

எனினும் காலச்சக்கரம் சுழன்றது. வெள்ளையரிடையேயும் சிலர், இரக்க மனம் கொண்டோர், தோன்றினர்—ஏனிந்தக் கொடுமை எனக் கேட்ட னர்—அவரும் மனிதர்தாம், அவர் தம் உடலிலே ஓடுவதும் செங்குருதி தான். உள்ளத்தே எழுவதும் உணர்ச்சிகள்தான் — எனில் அவ ருக்கு உரிமை தந்திடவேண்டும், அதுதான் நாகரிகம், மனிதப்பண்பு என வாதிடலாயினர், வால்ட் விட்மன் என்ற புரட்சிக் கவிஞரும், விட்டியர் என்றொரு கவிஞரும், பெரியதொரு நாத்திகவாதி என்று பெயரெடுத்த வரும், அமெரிக்க வரலாற்றிலும், ஆங்கில இலக்கிய வரலாற்றிலும் அழியாததோர் இடத்தைப் பெற்றி ருக்கிற இங்கர்சால், எவரும் மறுத் திடமுடியாத வாதங்களைத் தந்திட் டார், அடிமை முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கு. எனினும் அவர்தம் கருத்துக்கள், வாதங்கள், வேண்டுகோள்கள், அறவழிகள் அனைத்தும், இரக்கமற்ற வெள்ளை யர்தம் உள்ளத்தே ஏறிடவில்லை.

என்ருலும், அந்தப் பெரியவர் களாலே செய்ய இயலாத காரி யத்தை, காலம் செய்துகாட்டியது—1860—64ல் அந்த நாட்டில் ஏற் பட்ட உள்நாட்டுப்போர் மூலம்.

### வடக்கும் தெற்கும்

உள்நாட்டுப்போர் — அமெரிக்கா இனி ஒன்ருக இருந்திட இயலாதோ என்று பார்ப்போர் ஐயுறத்தக்க சூழ் நிலை!

அமெரிக்க வடபகுதிக்கும் தென் பகுதிக்குமிடையே போர்!

ஆலைகள் பல கொண்ட வடக்கு—காடு கழனிகளை மட்டுமே நம்பி வாழ்கிற தெற்கு!

அடிமை முறை தேவையில்லை யென்பதால், அது அடாது, கூடாது, என்று வாதாடிய வடக்கு—அந்த முறை ஒழிக்கப்பட்டால் நாட் டின் பொருளாதாரம் சீர்குலைக்கப் படும் என்றும், அதனாலே அடிமை கள் இருப்பது தேவை என்றும் விளக்கம் கூறிய தெற்கு!

மனித உரிமைகளின் மேம்பாடு குறித்து விளக்கங்கள் தந்து, அடிமைகளென ஓரினம் இருந்திடு வது, மனித குலத்துக்கே இழுக்கு என்று வழக்காடிய வடக்கு—மனித உரிமை மட்டுமா முக்கியம், மாநிலங் களின் உரிமைகளும் முக்கிய மன்றோ, அடிமைமுறை ஒழிந்திட வேண்டும், மத்திய ஆட்சிஆணையிடு வது, மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதாகும், அது கூட்டாட்சி முறைக்கு முரண்பட்டது எனத் தெளிவுரை தந்த தெற்கு!

இந்த இரண்டு பகுதிகளுக்கு மிடையே நீண்ட நாட்களாக இருந்த பொருளியல், அரசியல் போராட்டம், போட்டி மனப்பான்மை, இந்தப் பிரச்சினையிலேஉச்சக்கட்டத்திற்குச் சென்றது — பெரியதொரு போராக உருவெடுத்தது, 1860ல்.

அப்போது அந்த நாட்டின் ஜனதி பதி ஆபிரகாம் லிங்கன்!

நான்கு ஆண்டுகள் போர்-முடிவு, அடிமை முறை ஒழிக்கப்பட்டது, சட்டத்தின் மூலம்! இன வேறுபா டின்றி அமெரிக்கர் அனைவருக்கும் எல்லாத் துறைகளிலும் சமவாய்ப்பு வழங்கிடுவதெனத் தீர்மானிக்கப் பட்டது!

### ஆட்கொல்லிப் படை

சட்டங்கள் செய்தென்ன, அவற் றைக் காத்திட நீதி மன்றங்கள் நிறுவியென்ன, நீக்ரோவருக்கு வாழ் வளிக்கத் திட்டங்கள் தீட்டியென்ன, விட்டோமா பார் என்று புறப்பட்ட னர் தென்பகுதியிலேயிருந்து ஆயி ரக் கணக்கான வெள்ளையர் — கு ளைக்ஸ் க்ளான் என்றொரு இரகசியச் சங்கம் நிறுவினர்-இல்லை, இரகசியப் படை அமைத்தனர்.

அவர்கள் போர்ப்பரணி பாடியதென் னவோ உண்மைதான்—ஆனால் அவர் தம் படையெடுப்பு ஆட்சிபீடத்தின் மீதல்ல—அடிமைகளாக இருந்து விடு தலை பெற்ற நீக்ரோவர்மீது!

விடுதலைபெற்ற நீக்ரோவரது உயிர், மறுகணம் அல்லது மறுநாள் உலகி லிருந்தே விடுதலை பெற்றது, ஏராள மான இடங்களில் — இந்த இரகசியச் சங்கத்தின் 'கைங்கர்யம்' அது—நீக்ரோ வருக்கு அந்தச் சங்கம், ஆட்கொல்லிப் படை, அளித்த 'விடுதலைப் பரிசு'

சட்டத்தின் கரங்கள் அந்தச் சங் கத்தின் செய்கைகளைத் தடுத்து நிறுத்தவோ, கட்டுப்படுத்தவோ இயலவில்லை. ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாயின!

ஆத்திரப்பட்ட நீக்ரோவர் வேறொரு சங்கம் நிறுவினர், ஆட்கொல்லிப் படைக்குப் போட்டியாக — "விரைவில் வழிகாணும் சங்கம்" என்ற பெயரில்! அந்த சங்கம்கண்ட வழியோ பயங்கரமானது, "வெட்டுக்கு வெட்டு—குத்துக்கு குத்து—இரத்தத்திற்கு இரத்தம்! ஒரு நீக்ரோ கொல்லப்பட்டால் இரண்டு வெள்ளையர்களது உயிர் பறிக்கப்பட்டாக வேண்டும்" — இது அந்தச் சங்க உறுப்பினர்களுக்கு அளித்த போதனை! சாதனைகள் என்னவோ, நாமறியோம்! ஆனால், அந்தச்சங்கம் பிறந்த அதே வேகத்தில் இறந்துவிட்டது–காரணம், நீக்ரோவர் மிகச் சிலர், வெள்ளையர் மிகப்பலர், எனவே வெள்ளையரை ஆயுதந்தாங்கி, பலாத்கார முறையினைக் கையாண்டு எதிர்ப்பதென்பது இயலாது போயிற்று!

எனவே அவர்கள், இனி நமக்கு என்றென்றும் வாழ்வில்லை — உயிர்மேல் ஆசைஇருக்குமானால் அடிமைகளாக இருந்திடவேண்டும் — விடுதலை வேட்கை உண்டெனில் உயிரைப் பணயம் வைத்தாகவேண்டும் என்ற இக்கட்டான நிலை.

## தாயகம் நோக்கி........

இங்கிலையில் கார்வி என்றொருவன் —நீக்ரோ இனத்தினன்—புதியதொரு இயக்கத்தினைத் துவக்கினான்—1920-ல்.

"என்னருமைச் சோதரரே, தாயகம் விட்டிங்கு வந்தோம், ஓயாதுழைத்தோம், உருக்குலைந்தோம்; நாயினும் கேடாய் நலிகின்றோம், அடிமைச் சின்னம் நம்மைவிட்டு மாறவில்லை—மறையவில்லை, ஆமைகளாய் ஊமைகளாய், அல்லல்பல சுமக்கின்ற பிராணிகளாய் வாழ்கின்றோம், எனில், ஏனிந்த வாழ்வு, கனிபல உண்டு நம் தாயகத்தில், இயற்கையன்னை எழில் நிரம்பியிருக்கின்றாள், பொருள் பலவும் குவியல்குவியலாக அங்கிருப்பதுண்மை, எனவே, ஏற்றமிகு வாழ்வுபெற என்னருமைச் சோதரரே, புறப்படுவீர் நம் தாயகம் நோக்கி" என்று வீர முழக்கம் செய்தான், நாடெங்கணும்!

இந்த இயக்கம் அளவு கடந்த வேகத்திலே பரவியது, நீக்ரோவர்களிடையே!

எனினும்,அவர்களிடையேஇருந்த பற்பல வேற்றுமைகள்—அவ்வினத்தாரை நடத்திச்சென்ற தலைவர்களிடத்தேயிருந்த பேதாபேதங்கள், —அந்தப் பேதா பேதங்களைப் பயன்படுத்திப் பிரித்தாளும் சூழ்ச்சியினைத் திறம்படக் கையாண்ட வெள்ளையர் தம் 'ராஜதந்திரம்' அனைத்தும் இந்த இயக்கத்திற்குத் தோல்வி தேடித் தந்தன!

அடுத்த கட்டம் அமைதி—இயலாமையால் ஏற்படுகிற அமைதி—விதியை நொந்துகொண்டு, வேறென்ன செய்ய, இறைவனே, என்று 'அவன்'மேல் பாரத்தைப் போட்டுவிட்டு அனைவரும் செயலற்றுப் போவதாலே ஏற்படுகிற அமைதி.

இந்த அமைதிக்காலத்திலே சிற்சில மாறுதல்கள், சூழ்நிலைகள், நீக்ரோவருக்குச் சாதகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன — பாராளுமன்றச் சட்டங்களின் மூலமாக அல்ல —நீதிமன்றத் தீர்ப்புகளின் மூலம்!

ஆல்குட் என்றொரு நீக்ரோவுக்கு பல்கலைக்கழகத்தில் இடம் மறுக்கப்பட்டதை, நியாயமானதென்று ஒப்புக்கொண்டது, நீதிமன்றம்-1932-ல்! ஆனால், 1950-ல் ஸ்வெட் என்றொரு நீக்ரோவுக்கு பல்கலைக்கழகத்தில் இடமளிக்கப்படவேண்டும் என்று தீர்ப்பளித்தது, டெக்சாஸ் மாநிலத்திலேயுள்ளநீதிமன்றம். 118 ஆண்டுகளில் பெரியதோர் புரட்சி, இது!

ஆனால், நீதிமன்றத்தின் பணி இதோடு நின்றுவிடவில்லை–வெள்ளையருக்குத் தனிப்பள்ளிகள், நீக்ரோவருக்குத் தனிப்பள்ளிகள் என்றிருக்கின்ற முறை நியாயமன்று என்பது மட்டுமல்ல, அரசியல் சட்டத்துக்கே முரணானது, எனவே அது மாற்றப்படவேண்டும், வெள்ளையருக்கென இருக்கிற பள்ளிகளில் நீக்ரோச் சிறுவர்களுக்கும் இடம் கொடுத்தாக வேண்டும் என்று தாக்கீது விடுத்தது மாநிலங்களுக்கு, அண்மையில்!

## மீண்டும் புயல்....

இந்தத் தாக்கீது புதியதொரு புயலை உருவாக்கிவிட்டிருக்கிறது.

வெள்ளையர்தம்பள்ளிக்குச்சென்ற நீக்ரோச் சிறுவர்சிறுமியர் உயிரோடு திரும்பிவருவர் என்ற உத்தரவாதமில்லை. உடன் செல்வோர் எவராக இருப்பினும் அவருக்கும் அதே கதி!!

பத்திரிகை நிருபர்கள், பள்ளிச் சிறுர்கள், ஆசிரியர்கள், பாதிரிமார்கள், எவராக இருப்பினும் கருப்பரினத்தைச் சேர்ந்தவரெனில், அவர்தம் உயிர் ஊசலாடவேண்டிய நிலை-மானம் பறிக்கப்படுகிற கொடுமைகள்—ஆம், அத்தனையும் இந்த நாகரிக யுகத்தில், 1960ம் ஆண்டில்!

**கடந்த ஆண்டு ஒரு செய்தி–8 வயது பையன், நீக்ரோ இனத்தைச் சேர்ந்தவன், வெள்ளைக்காரச் சிறுமியொருத்தியோடு விளையாடிக்கொண்டிருந்தானும். அந்தச் சிறுமிக்கோ வயது ஆறு. விளையாட்டுவாக்கில் அந்தச் சிறுமி இந்தப் பையனுக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டாள். அவ்வளவுதான், பெரும் புயல், பையன் தப்புவது அரிதாகிவிட்டது—அது போதாதென்று அவன்மீது வழக்கும் தொடரப்பட்டது — தீர்ப்போ, மிக வேடிக்கையானது, அவனுக்கு 6 நாள் சிறைவாசம்! அவன் செய்த குற்றம், முத்தம் தந்ததல்ல, முத்தத்தைப் பெற்றது!!!**

*

இப்போது புரியும், முன்னாலே கூறப்பட்ட படப்பிடிப்பு — அந்தப் பேராசிரியர் கன்னெஞ்சத்தினராய் ஆன காரணம்-உயிருக்குப் போராடுவது வெள்ளை மாதுதானே, போகட்டும், என்று ஆடாமல் அசையாமல் இருந்த சூழ்நிலை!

படித்தவர்—பண்புடையவர்-நல்லதொரு எழுத்தாளர்—நாட்டின் நன்மதிப்பைப் பெற்றவர்—அவரது உள்ளமே இந்த அளவு குமுறுகிறதென்றால், சாதாரண மனிதர்கள், நீக்ரோ இனத்தைச் சேர்ந்தவர்களது உள்ளம் எந்த அளவு குமுறும்—அந்தக் குமுறிய எரிமலைகள் கொடுமைகள் தாங்கமாட்டாமல் தீப்பிழம்பைக் கக்கத் துவங்கினால் — ஆண்டாண்டு காலமாக அவர்கள் அனுபவித்து வரும் கொடுமைகள் அனைத்திற்கும் பழிவாங்க எத்தனித்தால், என்ன ஆகும்!! புகைச்சல், போராட்டமாக உருவெடுக்காமல் இருந்திடும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? சிந்திக்கவே இயலவில்லை, நம்மால்!!

*

# அந்தக் கயிறு

முத்து பொதுநலத் தொண்டர்களின் ஒருசொத்து. பெயருக்கேற்ற முத்து, முத்தான கருத்துக்களையே கலந்து பேசுவான். அந்தத் தன்னலம் கருதாமுத்து, இரவு பகலென்று பாராமல் பொதுத் தொண்டாற்றிக்கொண்டிருந்தான். மக்களிடத்தில், அவனுக்கு அமோகமான வரவேற்பு வந்து குவிந்துகொண்டிருந்தது. நல்லவர்களென்று சொல்லக்கூடியவர்களெல்லாம், அவனை ஒருமுகமாகப் புகழ்ந்து பாராட்டினர்கள். வெளியூர்களில், அரிவாளும் அரிவாளும் முத்தமிடுகிற அளவுக்குப் பகைமை உள்ளம் கொண்டிருந்தவர்களைக்கூட, அன்பென்ற ஆயுதம்காட்டி, ஒற்றுமையென்ற மாளிகையுள் கூட்டிச் சென்றிருக்கிருன். எவ்வளவு கீழ்த்தரமான—படுபாதாளத் தீயவழியில் சென்றுகொண்டிருந்தாலும், அவர்களிடம் அணுகி, அவர்களை நல்வாழ்க்கையின் சிகரத்திற்கு — பொதுத் தொண்டுக்கு இழுத்துவந்துவிடுவான்.

பல பெண்கள் இவனை மணக்கப் போட்டிபோட்டார்கள். சில பணக்காரப் பெண்கள், அன்பளிப்பென்ற பெயரில் ஆயிரக்கணக்கான ரூபாய்களை, ஆள்மூலம் அனுப்பிப் பார்த்தார்கள்? ஏமாற்றமடைந்த ஏந்திழைகள், அவனைக்கொலைசெய்யக் கூலிக் காலிகளை ஏவினர்கள். காலிகளால் ஒருசில நல்லவர்களைத் தானே கொலைசெய்ய முடியும்? எல்லா நல்லவர்களையும் கொலை செய்துவிடுவதென்ருல், நாட்டில் நல்லவர்களே இருக்கமுடியாதல்லவா?

முத்துவின் ஒரே அண்ணன் சந்தனம். முத்துவின் தாய்—தந்தை, அக்காள்—தங்கை, அண்ணன்—தம்பி எல்லாம் அவன் ஒருவனேதான்! நறுமணம் வீசும் சந்தனத்தை ஆண்கள் பெண்கள் அனைவருமே விரும்புவர் என்பது மரபு! ஆனல், போக்கிரி—முரடன் — சூதாடி—குடிகாரன்—பெண்பித்தன்—என்றசிறப்புப் பட்டங்களைப் பெற்றுவந்தான் சந்தனம். ஊரிலிருக்கும் தீயவர்களையெல்லாம் நல்லவர்களாக்கும் முத்துவால், தன்னுடன் பிறந்தானை—தாயின் பாலைப் பகிர்ந்துண்டவனைத் திருத்த முடியவில்லை. சந்தனத்தை, தன் அன்பென்னும் கயிற்றிலே கட்டிப்போட்டு, பொன்மொழியென்ற சவுக்கிலே ஆயிரமாயிரம் சொல்லடிகளை அடித்திருக்கிருன் முத்து. அவைகளை வெற்றுெலியென்ற நினைப்பில் வெறுத்தொதுக்கியிருக்கிருன் சந்தனம். ஒருநேரம் பொதுமக்களுக்காற்றும் நற்றெண்டை எண்ணி மகிழ்ந்திருக்கும் முத்து, மறுநேரம் அண்ணனை எண்ணிக்,

### பொன்னழகன்

கவலையென்னும் சிறையில் அடைபட்டுவிடுவான். இதுகண்ட நண்பர்கள் முத்துவுக்கு ஆறுதல்கூறி, விரைவிலேயே மணமுடித்துக்கொண்டால், அண்ணனை மறந்து, குடும்பத்தையும், பொதுநலத்தையும் நினைத்துச் சற்று நிம்மதி பெறுவாய்—என்ருர்கள். அதற்கு முத்து சொன்னதுதான் நண்பர்களுக்கு சற்றுச் சங்கடத்தை உண்டுபண்ணியது! "அண்ணனிருக்க நான் மணமுடிப்பது அவ்வளவு நல்லதல்ல; அதோடு, தீயவர்களை நல்லவர்களாக்குவதுதான் நமது வேலையே தவிர, தீயவன் அண்ணன் என்பதற்காக — அவனை தீயவனுகவே விட்டுவிட்டு நான் மணம்முடித்துக் கொள்வது எந்த வகையில் நல்லது?" என்ருன். அதற்கு நண்பர்கள் "உனது அண்ணன், தீய ஒழுக்கம் நிறைந்தவர் என்பது நாடறிந்த உண்மை! அவருக்குப் பெண் கொடுக்க யாருமே முன்வரமாட்டார்கள். அப்படியிருக்க, அவரால் உன் நல்வாழ்க்கை பலியாகவேண்டுமா? வேண்டாம்! நீ இல்லறத்தோடு இருந்தால்தான் எங்களுக்கும் பெருமை! ஆகவே, நீ உடனடியாகத் திருமணம் செய்தாகவேண்டும்?" பலரும் முடிவாகச் சொல்லிவிட்டுக் கலைந்துசென்றனர். முத்து முடிவு காண வழிதெரியாது குழம்பிய வனுய் அமர்ந்திருந்தான்.

மறுவாரம், சாத்திரம் பார்க்காது—சடங்கு செய்யாது கலப்பு மணம் நடந்துகொண்டிருந்தது, முத்துவுக்கு! ஏராளமான நண்பர்கள் மணவிழாவில் கலந்துகொண்டனர். ஏகப்பட்ட பரிசுகள் யார் யாரோ வைத்திருந்தனர், மணமக்களுக்குத்தர! ஆண்கள் யாருமே பெண்ணை அவ்வளவாகக் கவனிக்கவில்லை. மணப்பெண்ணுடைய முகம் விரிந்த தாமரையென்றே, முழுமதியின் பிம்பமென்றே சொல்லமுடியாது! பருத்த இரு பற்கள் அவள் உதட்டின்மீது உறங்கிக்கிடந்தன! யாரோ ஒரு பெண், அந்தக் கும்பலிடையே கத்தினுள் "ஐயோ! இதென்ன பெண்ணுக்கு ஒரு கால் நொண்டி..." என்று. எல்லோரும் திகைத்தபடிபெண்ணைப் பார்த்தனர். ஆமாம்; மணமகளுக்கு ஒரு கால் வளைந்து நெளிந்து கோணியபடி இருக்க, மணமகன் அருகில் அமர்ந்திருந்தாள்! முத்துவின் நண்பர்களெல்லாம், மணமக்கள் இருவரையுமே ஒரு மாதிரியாகப் பார்த்தனர். "இந்தப் பெண் யார்? எந்த ஊர்?" என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டனர். ஆனுல், முத்து

வையே கேட்டுவிடப் பலர் துடித்தாலும், அந்த நிலையில் கேட்பது தவறென்று அமைதியாயிருந்தனர். வந்திருந்தோர்க்கெல்லாம் அருமையான விருந்து இருந்தது; என்றாலும், அதை மருந்தாகக் கருதி அருந்தாமல் கலைந்தனர் பலரும். ஏனெனில், மணப்பெண்மீது உள்ள மனக்குறை; விருந்தைப்பற்றி நினைக்காமல் செய்துவிட்டது, அன்றைய சூழ்நிலை!

அன்றிரவு முத்து நல்ல ஓய்வெடுத்துக்கொண்டிருந்தான் தனிமையில். அப்போது அவனுடைய நண்பர்கள் பட்டாளம் அவனைச் சூழ்ந்து நின்றன. அவர்களுடைய முகத்தோற்றமெல்லாம், இந்தப்பெண்ணை ஏன் மணமுடித்தாய்? இவள் எங்கே கிடந்தாள்? இவள் யார்? எந்த ஊர்? என்று கேட்பதுபோலிருந்தது. இதைப் புரிந்துகொண்ட முத்து, எல்லோரையும் அமைதியாக அமரும்படி கூறிவிட்டு, நடந்தவற்றைச் சொல்ல ஆரம்பித்தான். "நண்பர்களே! உங்களது முகத்தோற்றத்தில் காட்டிய கேள்விக் குறிகள், உங்கள் உள்ளத்திலிருப்பவைகளைச் சொல்லிவிட்டன என்னிடம்! எனவே, உங்களுக்குத் தெரியாது. நடந்த நிகழ்ச்சியை, நீங்கள் அறிந்தால்தான் அமைதி பெறுவீர்கள். நான் இப்போது மணந்திருக்கிற மல்லிகா, கோதூர் பூசாரியின் மூத்த மகள். பூசாரியென்றால் வறுமையின் அடித்தட்டிலே வாழக்கூடியவர்! அவருக்கு இரண்டு பெண்கள்; ஒன்று மல்லிகா, மற்றொன்று மரகதம். இந்த இரண்டு பெண்களுக்கும் மாப்பிள்ளைகளே கிடைக்கவில்லை! தினந்தோறும், தான் பூசை செய்யும் கடவுளிடம் சொல்லிச் சொல்லிச் சலித்தபின்னர், இனிப் பயனில்லையென்று தெரிந்து — பொங்கிவந்த சினத்தால் கடவுள் சிலைகளை உடைத்துத் தள்ளிவிட்டுத், தற்கொலை செய்துகொள்ளும் கட்டத்திற்கு வந்திருந்தார். அப்போது நான் கோதூர் வழியாகச் சென்றுகொண்டிருந்தேன். கல்லுமேட்டு வேப்பமரத்தின் ஒரு கிளையில், சுருக்குக் கயிற்றை மாட்டிக்கொண்டிருந்தார்! கண்ட நான், அவரைக் காப்பாற்றினேன்; அவர் கதையைக் கேட்டேன் — இப்படிச் சொன்னார்: "அருமை பெருமையாக இரு கண்மணிகளை — என் செல்வங்களைக் காத்து வளர்த்தேன். இளமையென்னும் பருவத் தடாகத்திலே செல்விகளிருவரும் விளையாடிக்கொண்டிருந்தனர். ஆனால், மழையில்லாது வாடிய பயிர்போலவே காட்சியளித்தனர்! இந்தக் காட்சி என் கண்களைக் கொத்திப் பிடுங்கித்தின்றது. வருபவர்களெல்லாம் ஏராளமான வரதட்சணை கேட்டனர். அரை வயிற்றுக் கஞ்சிக்கே அல்லற்படும்போது, இரு பெண்களுக்கும் என்னால் எப்படி வரதட்சணை கொடுக்க முடியும்? அதோடு, என் மூத்த பெண்ணோ அழகில்லாதவள்—என்பதோடு ஒரு கால் கோணி வளைந்திருக்கும்! என் சிறிய பெண் மல்லிகா பேரழகிதான்; என்றாலும், வரதட்சணையில்லாமல் யாரும் கட்டிக்கொள்ள முன்வரவில்லை. இத்துயரங்களைத் தாங்கிக்கொண்டு நான் ஏன் வாழவேண்டும்?" என்று என்னைக் கேட்டுவிட்டு, இரு கண்களிலிருந்தும் கண்ணீர் உகுத்தார்! என்னுடைய கண்களும் அவருடைய கண்களாயின. நான் ஒரு முடிவுக்கு வந்தேன்; உடனே அவருக்கு உறுதிமொழி தந்தேன்! பெரிய பெண்ணை நான் மணமுடித்துக்கொள்வதாகவும், சிறிய பெண்ணை என் அண்ணனுக்குக்கட்டிக்கொள்வதாகவும். அவரும் அதற்கு இசைந்தார். அந்தப்படிதான் இன்று என்னுடைய திருமணம் முடிந்திருக்கிறது. இனி, அடுத்த வாரம் இதே நாளில், மரகதத்தை — என் அண்ணனுக்கு இதைப்போலவே நீங்களுமிருந்து முடித்துத்தரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்."
நண்பர்களுடைய முகத்தை உற்று நோக்கினான் முத்து. எல்லோரும் அடித்துவைத்த சிலைபோல், ஆடாது அசையாது அமர்ந்திருந்தனர்.

மறுநாள் காலையில் தன் இல்லத்தின் முன்பு, முத்து பல் துலக்கிக்கொண்டிருந்தான். யாரோ ஒருவர் மிக வேகமாக முத்துவின் அருகில் ஓடிவந்து, அவசரமாக — சின்னக் குரலில் இப்படிச் சொன்னார். "உங்கள் அண்ணன் சந்தனம், கோதூர் கல்லுமேட்டு வேப்ப மரத்தில் தூக்குப் போட்டுத் தொங்குகிறார்!" இறுதிச் சொல்லைக்கூட எதிர்பாராமல் ஓடினான் முத்து! அன்று பூசாரியின் உயிரைக் குடிக்கத் துடித்துக்கொண்டிருந்த 'அந்தக் கயிறு' இன்று தனது அண்ணனின் உயிரைக் குடித்து நாட்டியமாடிக்கொண்டிருந்தது கண்டான்; கத்தினான்; கதறினான்; கண்ணீர்விட்டான். இந்தக் கயிறு, தன் உடன்பிறந்தானின் உயிரை முத்தமிடும் என்று அன்றே தெரிந்திருந்தால், அதை அங்கேயே போட்டுவிட்டா வந்திருப்பான்? பூசாரியின் கையிலிருந்து பிடுங்கிய அந்தக் கயிற்றை, பூ நாகமென்று கருதியல்லவா வெகு தொலைவில் விட்டெறிந்திருப்பான்?......அங்கு கூடியிருந்தோரைவிலக்கியபடிசிலபோலீசார் வந்தனர்! சந்தனத்தைப் பிணமாகக் கீழே இறக்கிப்போட்டு, புரட்டிப் புரட்டி எதையோ தேடினர். பிணத்தின் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தைக் கண்டெடுத்தனர்! அதில் எழுதியிருந்த வாசகங்கள், முத்துவை மேலும் மேலும் துயரத்துக்கு உள்ளாக்கியது!

"நான் சமூகத்திலிருந்து வெகு தூரத்தில் விரட்டப்பட்டவன். கொடியவனான என்னை நல்லவனாக ஆக்க எண்ணிய என் தம்பி, கடைசியாகக் கையாண்ட முறை எத்துணை தியாக உணர்வோடு செய்யப்பட்டதென்பதை நினைத்துப் பார்க்கக்கூட என் உள்ளம் இடம் தரவில்லை. எனவே, எனதருமைத் தம்பியின் திருமணத்துக்கு வழி கோலிய அந்தக் கயிறே எனது இறுதிக்கு வழிகோலட்டும் என்றெண்ணிச் சமூகத் துரோகியாகிய என் வாழ்வை முடித்துக்கொள்கிறேன்" என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

★

## புல்லாங்குழல் மேதை
## என் எஸ். சுவாமிநாதபிள்ளை

புல்லாங்குழல் வல்லுனர் டி. என்' சாமிநாத பிள்ளையவர்கள் மறைவு குறித்து 17---2---61-ல் குளிக்கரை நாதசுரம் கே. எஸ். பிச்சையப்பா அவர்கள் இல்லத்தில் ஒரு இரங்கற் கூட்டம் நடைபெற்றது. பிச்சையப்பா அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைவகித்து மறைந்த மேதையின் சேவையையும் அவரது ஆற்றலையும் புகழ்ந்து, அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பு என்று கூறினார்.

# அவர் நடந்த பாதை....!

சி. பெரியண்ணன்

## காட்சி 1

இடம்:- சாக்ரடீஸ் இல்லம்

உரியோர்:- சாந்திபே

சாக்ரடீஸ் குழந்தைகள்:-

*[சாந்திபே குழந்தையைத் தொட்டிலிலிட்டுதாலாட்டிக் கொண்டிருக்கிறாள்; அது சமயம் சாக்ரடீஸ் மூட்டை முடிச்சுக் களோடு வந்து......]*

சாக்ரடீஸ்:- என்ன சாந்திபே, சுகந் தானே!

சாந்திபே:- சுகந்தான் அத்தான்! இப்போதுதான் வருகிறீர்களா?

சாக்ர:- ஆம் சாந்திபே! நாட்டின் கேட்டைப் போக்கப் புறப்பட்டுப் போனால்; பின் வீட்டைப்பற்றிய, நினைவு கனவாகிவிடுகிறது.

சாந்தி:- துணையைப் பிரிந்து வாடும் துன்பம் எனக்குத்தானே தெரியும்! உங்களுக்கென்ன? நாடு! நாடு!! நாடு!!! இதுவேதான் உங்கள் நாட்டமெல்லாம்!

சாக்ர:- என்ன இருந்தாலும், நாம் பிறந்த பொன்னாடு வஞ்சகரின் உரிமை நிலமாகிவிட்டால், மானோடும் சோலைக்குக் கோனாக நரி முடி சூடிக்கொள்ளும் நிலைமை தானே ஏற்படும், அதைத் தடுக்க வேண்டாமா?

சாந்தி:- வேண்டியதுதான்! இப்படிப் பட்டவர் என்னை ஏன் கலியாணம் செய்து கொள்ள வேண்டும்? பிரம்மச்சாரியாக இருந்து கொண்டே பிறந்த பொன்னாட்டிற்கு உழைப்பதுதானே?

சாக்ர:- கோபமேன் கோமளாங்கி! கொஞ்சுமொழிக் கிளைஞர் உன் மஞ்சத்தை அழகுபடுத்தி உனக்கு ஆனந்தமளித்துக் கொண்டிருக்கும்போது, என் துணை என்ன அதைவிட இனிக்கவா போகிறது?

சாந்தி:- சுற்றி வளைத்து மற்றதைக் காட்டி மறைக்காதீர்கள்! சென்ற ஆண்டு விடுமுறை தந்தால் வேண்டாமென்று ஏன் எழுதிக் கொடுத்துவிட்டீர்கள்?

சாக்ர:- ஓ! அதைப்பற்றிக் கேட்கிறாயா? அதற்காகவா இவ்வளவு கோபம்! கண்ணே! பொலெப்போனேஷியா யுத்தத்தில் பொட்டிடே என்ற இடத்தில் நடைபெற்ற போருக்கு ஆயத்தமாக இருந்த நேரமது! அந்நேரத்தில் நான் விடுமுறை பெற்றுக்கொண்டு வந்துவிட்டிருந்தால், இந்நேரம் நம் நாடு அடிமை விலங்கால் பிணைக்கப் பட்டிருக்கும். அவ்விலங்கை உடைத்த பெருமை உன் அத்தானுக்குத்தான் சேர்ந்தது.

சாந்தி:- இந்த விடுமுறையிலாவது வீட்டிலேயே இருப்பீர்களா? இல்லை—இப்போதும் எங்காவது ஒரு நாடு காத்துக்கொண்டிருக்கிறதா?

சாக்ர:- இந்த ஆண்டு விடுமுறை இல்லை சாந்திபே! விடுதலை கிடைத்துவிட்டது!

சாந்தி:- என்ன சொல்லுகிறீர்கள் அத்தான்?

சாக்ர:- இராணுவத்திலிருந்து விலகி வந்துவிட்டேன். இனிமேல் அங்கு போகவேண்டிய அவசியமே இருக்காது.

சாந்தி:- இனிமேலாவது பிரியமாட்டீர்களே...!

சாக்ர:- நான் பிரியமாட்டேன், ஆனால்...!

சாந்தி:- என்ன ஆனால்...!

சாக்ர:- சந்தர்ப்பம் பிரியவைத்தால் என்ன செய்வதென்று சொல்ல வந்தேன், கண்ணே!

சாந்தி:- என்ன அத்தான்!

சாக்ர:- உன் மதிவதனப் புன்னகை மயக்கத்தைத் தருகிறது. அன்பின் தழும்பாக, மின்னலின் ஒளியாக மின்னிடும் உன் முகம் தண்ணிலவைத் தகர்த்தெறியும் சாந்தமும், இடியென முழங்கும் உன் வாய், தேனொழுகும் இன்ப மொழிகளையும் உதிர்க்கிறது. கோபக்கனலைக் கக்கிடும் குவளை நிகர்த்த கண்கள், அமைதியின் மடியிலே விளையாடும் நிலையைப் பெற்றிருக்கின்றன. மது உண்ட மனிதனானேன்! இப்போது உன் நிலை......?

சாந்தி:- அத்தான்!

சாக்ர:- கண்ணே!

*[அதுசமயம் மூத்த மகன் லாம்ப்ரோக்ளீஸ் வருகிறான், பார்த்துவிட்ட சாக்ரடீஸ்]*

சாக்ர:- வாடா கண்ணே லாம்ப்ரோக்ளீஸ்! தம்பி ஸோப்ரோனிஸ்கஸ் எங்கே?

சாந்தி:- அவன் தூங்கிக்கொண்டிருக்கிறான். ஆமாம் அத்தான்! வேலையைத்தான் இராஜினாமா எழுதிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டீர்களே, இனிப் பிழைப்புக்கு ஒரு வேலை தேடவேண்டாமா?

சாக்ர:- வேலையே பார்க்கப்போவ தில்லை கண்ணே!

சாந்தி:- வேலைப்பார்க்காமல் பிழைப் பதுதான் எப்படி?

சாக்ர:- என் பிழைப்புக்காக நான் வேலையில் அமர்ந்தால், வருங் கால கிரேக்க சமுதாயத்தின் பிழைப்பையே நாசம்செய்த வஞ் சகனாய், நேர்மையற்ற பாதகனாய் ஆக்கப்பட்டுவிடுவேன். என்மனச் சாட்சியும் என்னைக் கொல்லாமல் கொன்று கொடுமைப்படுத்திக் கொண்டேயிருக்கும். என் அறி வுக் கண்கள் திறந்தன. இன் றைய உலகத்தின் மூடநம்பிக்கை களும், காட்டுமிராண்டிச் செயல் களும், மக்களிடம் அப்படியே அட்டைபோல் ஒட்டிக்கொண்டே செல்லுமானால், மிருகத்தின் செய லும் மனிதனின் செயலும் ஒன் ருகிவிடும். அதைத் தடுக்க வேண்டாமா?

சாந்தி:- சுத்த சித்தியோடுதானே பேசுகிறீர்கள், இல்லை...ஒருகால் .........?

சாக்ர:- பைத்தியம் கொழுந்துவிட்டு வளருகிறது என்கிருயா?

சாந்தி:- இல்லை, மூளைக்கோளாறு ......?

சாக்ர:- அதெல்லாம் ஒன்றுமில்லை சாந்தியே, உலகத்தை உற்று நோக்காதவரைக்கும், அறியாமை என்னைச்சுற்றி அகலாது திரை யிட்டுச் சொந்தம்கொண்டாடி வந் தது. இப்போது என் அறிவுக் கண்கள் திறந்தன. உலகம் ஒரு பயங்கரமேடை என்பதை உணர்ந்தேன்! உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன், ஆலயவாசிகள், அவன் அருள் பெறுவோர்கள் இப்படிப்பட்ட ஏற் றத் தாழ்வுகளால் மக்கள் எவ் வளவு துன்பத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது? அரசியல் என் கிருன்; அங்கே அக்கிரமங்கள் பலசெய்து அந்தஸ்தைக் கைப் பற்றுகிருன்; பட்டம் பதவிகளுக் காக நாட்டுமக்களின் நலன்களை எல்லாம் அழித்துவரும் வஞ்சக ரின் அட்டகாசத்தை அடக்க வேண்டாமா?

சாந்தி:- யார் எப்படி நாசமாய் போனல் உங்களுக்கென்ன? ஏதாவது ஒரு வேலையைத்தேடி நாமும் நாட்டிலுள்ளவர்களைப் போல நாலு காசு சம்பாதித்து வாழ்வதற்கு வழிபாருங்கள். மற்ற வீட்டுப் பெண்கள் எல்லாம் மாடிக்குத் தேடிவரும் தென்றல் வீசும் நேரத்திலே, சேடிகளோடு பாடி ஆடி ஒய்யாரமாக, உல்லாச மாக வாழுகிருர்கள். உங்களை மணந்துக்கொண்ட நான் என்ன கண்டேன்? நகையுண்டா? நட் டுண்டா! இல்லே......

சாக்ர:- அக்ரமத்தால் பொருள் தேடி ஆனந்த சுகபோக வாழ்வில் திளைக்க விரும்புகிருயா?

சாந்தி:- இல்லை; 'அறிவு அறிவு' என்று சொல்லி ஆண்டிகளாகத் தெருவில் அலையலாம் என் கிறேன்!

சாக்ர:- கோபமேன்! கோபம் அறி வுக்குத் திரைபோடும் என்பதை..?

சாந்தி:- கோபமுமில்லை! தாபமும் இல்லை! என்விதி செய்தசதி. உங் களைக் கட்டிக்கொண்டதற்கு இது வும் வேண்டும் இன்னும் வேண் டும்.

சாக்ர:- இப்போது என்ன நடந்து விட்டது? இப்படி ஆத்திரப்படு கிருய்! சூதிலே சுகபோக வாழ்க்கை நடாத்தும் பணக்காரர் வீட்டுச் சுந்தரிகள் விந்தைமிகு விளையாட்டுப் பதுமைகள் என் பதை நீ உணரமாட்டாய்! அவர் கள் சொந்தமாய் சிந்தனைச்செய் யும் பகுத்தறிவு அற்றவர்கள்; தன்மையும், பண்பாடும் இல்லாக் கண்ணற்ற குருடர்கள்! கானம் பாடும் குயிலின் இசையை அவர் களின் காது ஏற்காது, வானம் இடிந்து என் தலைமேல் விழுந்தா லும் மானத்தை இழக்கமாட்டேன் என்றுரைத்துக், கனவான் தரும் கொடுமைகளைதானமாகஏற்றுக் கொண்டு, சிந்தும் கண்ணீரோடு எழுப்பும் அழுகுரல்தான் அவர் களுக்கு ஆனந்தகீதமாகும். இல்லாவிட்டால் பெற்று வளர்த்து மடிமீதிட்டு 'பேசடா என் கண்ணே!' என்று மழலைமொழி கற்றுத், தரும்போது அன்பும், அறிவும் சேர்ந்த பண்பான பழக் கத்தைக் கற்றுத் தந்திருந்தால், இன்றைய சமுதாயம் இப்படிச் சீர் கெட்டுப்போகுமா?

சாந்தி:- ஆமாம்! உங்களைப்போல 'அறிவு' 'அறிவு' என்று சொல்லி, ஆண்டிகளாகப் பிச்சை எடுக்க வைக்காமல், தன் பிள்ளைகளை வல்லவர்களாக வளர்ப்பது பெரி தும் தப்புதான்!

சாக்ர:- கொள்ளையடிப்பதிலும்' கொலை செய்வதிலும், வல்லவ னுக்குவதுதான் நல்லதா?

சாந்தி:- பணக்காரனைப் பார்த்துக் "கொள்ளைக்காரன்" என்று சொன்னீர்களானல், கல்லை எடுத்து அடிப்பான் "இவன் யாருடா பைத்தியக்காரன்" என்று. தெரியுமா?

சாக்ர:- பைத்தியக்காரவேஷமிட்டுப் பலஏழைகளைக்கல்லால்அடித்துத் தானே பணக்காரனுகி உல்லாச மாக வாழுகிருன்! நான் பைத்திய மென்ருல், நானும் பணக்காரனுக அல்லவா இருக்கவேண்டும்?

சாந்தி:- அப்பப்பப்பா! போதும்! போதும்! எனக்கு என்ன? சம் பாதித்துக்கொண்டு வந்தால் சமைத்துப் போடுகிறேன். இல் லாவிட்டால் எந்த இழவாவது போகட்டுமே! வேதாந்தமும் வெட் டிப் பேச்சும் அடுப்பிலே வேகின் றதா என்று பார்க்கலாமே?

சாக்ர:- சிந்தனை உணவருந்தி, வந் தனை செய்வோம் பகுத்தறிவை, என்கிறேன் நான்.

சாப்தி.- எக்கேடாவது கெட்டுப் போங்கள்! எனக்கென்ன வந் தது?

சாக்ர:- என் நாட்டு மக்களைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

சாந்தி:- நீங்கள் பார்க்காததால் அவர்களெல்லாம் ஓட்டாண்டி களாக அலைந்துக்கொண்டிருக் கிருர்கள்! போய் கோட்டைக் காரர்களாக்கிவிட்டு வந்துவிடுங் கள்.

சாக்ர:- உம்! (சிரித்துக்கொண்டே( என் கொள்கை கொழுந்துவிட்டு வளர்ந்தால் கொப்பளிக்காதா இந் நாட்டில் இன்பம்.

சாந்தி:- அதையும் பார்க்காமலா சென்றுவிடப் போகிறேன் (என்று சாந்தியே சென்றுவிடுகிருள். சாக்ரடீஸ் சிரித்துக்கொண்டே வெளியேறுகிருர்.)

[ காட்சி முடிவு. திரை ]

அடுத்த இதழில் முடியும்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

நீண்ட நாட்களாகவே தனிப்பட்ட முறையில் வெளியிட்டு வந்திருக்கும் கோட்பாடுகள் அவர் அல்ஜீரிய சுதந்திர இயக்கத்துக்குக் குறிப்பாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சிக்குப் பொதுவாகவும் அவர் கொண்டுள்ள குறிக்கோள்களை வெளிப்படையாகவே விளக்குகின்றன.

அல்ஜீரிய சுதந்திரப் போரைப் பற்றி அமெரிக்காவின் கொள்கை, கென்னடியின் ஆட்சிக்காலத்தில் புதுவிதத் திருப்பத்தை மேற்கொள்ளும் என மனித சுதந்திர இன உணர்ச்சியில் விருப்புக்கொண்ட அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

பொதுவாக சீனுபற்றிய அமெரிக்காவின் எண்ணமும், ஐ. நா.வில் சீன நுழைவு பற்றிய அதன் கொள்கைகளும் கூட ஓரளவு, இதுவரை இருந்து வந்த நிலையினின்று மாறுபட்டுச் சுமுகமான நிலையில் இயங்கக்கூடும் என உலக அரசியல்வாதிகள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

இரண்டு அமெரிக்க விமானிகளை இரஷ்யா விடுதலை செய்திருப்பதும், அதேபோது இனி அமெரிக்கா வேவு விமானங்களை நிரந்தரமாகவே பறக்காமல் நிறுத்திவைக்கப்போகிறது என்ற கென்னடியின் அறிவிப்பும், இனி இவ்விரு தலைவர்களும் கொள்ளப்போகிற கெடுபிடிப் போரற்ற உறவுமுறைகளைத் தெளிவுபடுத்துகிறது.

இதுபோன்ற அவரது கொள்கைப் பிரகடனங்களிலும், முக்கிய அரசியல் பதவி நியமிப்புகளிலும், தனியொருவித ஏற்றமும் சிறப்புத் திறமையும் மிளிர்வதை அரசியல் வல்லுநர்கள் வியந்து பாராட்டுகின்றனர்.

உலக அமைதிக்காகப் பாடுபடுவதில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு நடந்து ஒத்துழைப்போடு செயல்பட்டுவர அவர் கம்யூனிச நாடுகளுக்கும் குறிப்பாக இரஷ்யாவுக்கு விடுத்த அழைப்பு, கம்யூனிசத்தை நிறுத்தவேண்டும் என்ற நோக்குக்காக இல்லாமல், அதனதன் தேவைகளை உணர்ந்து உலக நாடுகளுக்கு உரிய முறையில் பொருளாதார உதவிகளைத் தருவது என்ற அறிவிப்பு; இந்த இரண்டு கோட்பாடுகளும்தான் பதவித்துவக்க உரையின்போது அவரது பேச்சில் முக்கியத்துவம்பெற்று மிளிர்ந்தன. இந்த இரு கொள்கைகள் மட்டும் இரு சக்திகளின் ஒத்துழைப்போடு செயல்படுத்தப்பட்டால் உலகில் கெடுபிடிப்போரையே இல்லாத பொருளாக்கிவிடலாம் என்பது அரசியல் தலைவர்கள் அனைவரது திடமான எண்ணம்.

எனவேதான், இத்தடவை நடந்த அமெரிக்க தேர்தலும், புதுத்தலைவர் பதவியேற்பும் உலகின் கவனத்தையே கவர்ந்தவையாக இருந்தன.

உலகம் கொண்டிருந்த நம்பிக்கை வீண்போகவில்லை.

இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் எழுதியிருந்தபடி மேற்கு அரசியல் வானில் ஒரு புதியநட்சத்திரம் தோன்றியிருக்கிறது! ❋

# புள்ளி விவரம் பேசுகிறது!

—[எ. கலைமுகிலன்]—

ஐந்தாண்டுத் திட்டத்தைக்காட்டி, தென்னவரின் கண்களிலே மண்ணைத்தூவி, தென்னவரின்வளத்தைச் சுரண்டி, வடக்கு மாநிலங்களை வளங்கொஞ்சும் மாநிலங்களாக—எழில்தவழும் தரணியாக—சோலைகளும் ஆலைகளும் அணி செய்யும் அழகு நகர்களாக மாற்றிவருகிறது தில்லி ஏகாதிபத்தியம் என்ற உண்மையை உணர்த்திய படி, புள்ளிவிவரக் கணக்குகளைத் தந்துவருகிறோம்.

நாம் சுட்டிக்காட்டியகாரணகாரிய விளக்கங்களை-புள்ளிவிவரக்கணக்குகளை மறுக்கவோ, மறைக்கவோ இயலாத மந்த மதியினர், ஏதேதோ பேசிக் கழகத்தை அழித்தொழித்திடும் வேலையிலே ஈடுபட்டிருக்கின்றனர்! 'தென்னகமாவது புறக்கணிக்கப்படுவதாவது! அதெல்லாம் சுத்தப் பொய்; கட்டுக்கதை' என்று பிதற்றியபடி உலா வருகின்றனர், ஊராள வந்திருக்கும் உத்தமர்கள்!

உண்மைக்குத் திரையிட்டு, பொய்மமைக் கருத்துக்களை அள்ளி வீசி, முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிக்கொண்டு வருபவர்களின் பொய்யுரைகளைப் புறமுதுகிட்டோடவைத்து, கழகத்தின் கருத்துக்களை — புள்ளிவிவரங்களை மெய்யென்றுரைத்து வலி ஊட்டுகின்ற முறையில் கிடைத்துள்ள புள்ளிவிவரக் கணக்குகளை, 'பாரதம் ஒன்று; அதுவே நன்று' என்றுரைத்துவரும் 'ஏக இந்திய'த் தூண்கள் பார்த்தபின்னரேனும் திருந்தட்டும்.

அண்மையில் தில்லிப் பாராளுமன்றத்தில், எழுப்பப்பட்ட வினா ஒன்றுக்கு, **யூனியன் திட்டத்துணை அமைச்சர் எஸ். என். மிஸ்ரா அளித்த** விடையில், பெரும்பெரும் தொழில்களுக்கென மத்திய அரசியலார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன் மூன்று ஆண்டுகளில் 41,419-இலட்சம் ரூபாய்கள் முதலீடு செய்துள்ளது, என்று குறிப்பிடுவதைக் காணுங்கள்:

| மாநிலம் | இரண்டாவது திட்டத்தின் முதன் மூன்று ஆண்டுகள் | |
|---|---|---|
| 1. சென்னை | 2,258 | இலட்சம் |
| 2. கேரளம் | 25 | ,, |
| 3. மைசூர் | 259 | ,, |
| 4. ஆந்திரப்பிரதேசம் | 65 | ,, |
| 5. பீகார் | 524 | ,, |
| 6. பம்பாய் | 275 | ,, |
| 7. மத்தியப்பிரதேசம் | 12,709 | ,, |
| 8. ஒரிசா | 13,873 | ,, |
| 9. பஞ்சாப் | 910 | ,, |
| 10. உத்தரப்பிரதேசம் | 69 | ,, |
| 11. மே. வங்கம் | 10,352 | ,, |
| 12. தில்லி | 89 | ,, |
| ஆகமொத்தம் | ரூ. 41,419 | இலட்சம் |

இந்த வரிசையை — மாநிலவாரியான புள்ளிவிவரங்களைத் தந்தவர் யூனியன் திட்டத் துணை அமைச்சர்! எனவே, எந்தத் தேசியத்தோழரும் இதை மறுத்துவிட முடியாது!

முதலீடுசெய்யப்பட்ட 41,419-இலட்சத்தில் தென்னகத்திற்கென கிடைத்துள்ள தொகை ரூ. 2617-இலட்சம்!

வடக்கத்தி மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டு, முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ, 38,802-இலட்சம்!

தென்னகத்தில் தமிழகம்—ஆந்திரம்—கேரளம்—கன்னடம்—ஆகிய நான்கு மாநிலங்களுக்கு 2,617-இலட்சந்தான்!

வடக்கே உள்ள, மற்றைய எட்டு மாநிலங்களுக்குக் கிடைத்துள்ள, செய்யப்பட்டுள்ள முதலீடு 38,802 இலட்சம் ரூபாய்கள்!

முதலீடு செய்யப்பட்டுள்ள தொகையுள் மக்கள் கணக்கீட்டுப்படி திராவிடத்துக்குக் கிடைக்கவேண்டிய தொகை 10,354·75-இலட்சமாகும்.

வடக்கத்தி மாநிலங்களுக்குக் கிடைக்கவேண்டிய தொகை 31,064·25 இலட்சம்தான்!

ஆனால், 10,354·75-இலட்சம் பெறவேண்டிய திராவிடம் 2,617 இலட்சத்தைமட்டுமே பெற்றிருக்கிறது! அதாவது பெறவேண்டிய தொகையில் கால் பாகத்தைத்தான் பெற்றிருக்கிறது!

31,064·25-இலட்சத்தை மட்டுமே பெறவேண்டிய வடக்கு மாநிலங்கள் 38,802-இலட்சத்தைப் பெற்றுள்ளன. அதாவது, பெறவேண்டிய தொகையைவிட அதிகப்படியாக 7,737·75-இலட்சத்தைப் பெற்றிருக்கிறது!

மக்கள் தொகையின்படி கணக்கிடுவது தவறு என்று யாரேனும் வாதிட்டுச், செலவழிக்கப்பட்டுள்ள 12-மாநிலங்களின் அடிப்படையில் நியாயம் காணமுற்பட்டாலும் வடக்கே வளம்பெற்றிருக்கிறதென்பதை மறுக்கமுடியாது.

முதலீடு செய்யப்பட்டுள்ள தொகையான ரூபாய் 41,419-இலட்சமும் 12-மாநிலங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது!

12-மாநிலங்களுக்கு 41,419-இலட்சம் ரூபாய்கள் என்றால், ஆந்திர—கர்னாடக—கேரள—தமிழக — மாநிலங்களைக்கொண்ட திராவிடத்துக்குக் கிடைக்கவேண்டிய மொத்த முதலீட்டுத் தொகை முக்கால் பங்காகும். அதாவது 13,806·33-இலட்சம் தென்னகத்தின் பங்காக ஆகிஇருக்க வேண்டும்.

கிடைத்துள்ள — முதலீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள தொகையோ 2,617-இலட்சம் தான்.

கிடைக்கவேண்டிய — முதலீடு செய்யப்படவேண்டிய தொகையில் 1/5 பகுதியைத்தான் பெற்றுள்ளது, திராவிடம்!

ஆகவே, மக்கள் தொகை அடிப்படையில் கணக்கிட்டாலும் சரி, மாநிலங்கள் அடிப்படையில் கணக்கிட்டாலும் சரி—தென்னகம்—திராவிடம் பெறவேண்டிய முதலீட்டை இழந்திருக்கிறது!

வடக்கு மாநிலங்கள் பெறவேண்டிய—முதலீடு செய்யப்பட வேண்டிய தொகையைவிட அதிகம் பெற்றுள்ளது!

திராவிடம் புறக்கணிக்கப்பட்டுள்ளது!

வடக்கு வாழ வகையும், வழியும், காட்டப்பட்டுருக்கிறது!

இதுதான் திட்டத் துணையமைச்சரின் புள்ளிவிவரக்க கணக்குக் கணித்துக்காட்டும் கணிதம்!

இந்த உண்மைக்குத் திரையிட்டு மறைத்துவரும் மகானுபவர்களுக்கு, அவர்தம் சீடகோடிகளுக்குக் காலந்தான் பதில்கூறவேண்டும்; அவர்தம் முகமூடியைக் கிழித்தெறிந்து, உண்மையை உலகுக்குணர்த்த வேண்டும்!

அந்தக் காலந்தான் வருகிற 1962!

தேர்தல் 'திரு'வுலா கிளம்பி இருக்கும் காங்கிரசுக்கு நற்புத்தி புகட்டத், திராவிடம் தயாராகட்டும்!

அகலட்டும் அடிமை இருள்!


## விற்பனையாளருக்கு எமது நன்றி!

மார்ச் 10 முதல்

# அறப்போர்

உயரிய வார ஏடு

ஆசிரியர்: அரங்கண்ணல்

முதல் இதழில்

★ கேரளச் சிறுகதை
★ அருமையான ஆங்கிலக்கதை
★ உணர்ச்சிக் கட்டுரைகள்
★ படங்கள் பல!

## தி.மு.க. தலைவர்களது இருவண்ண முகப்பு

12 பக்கம் விலை 15 காசு

'கிரவுன் சைஸ்'

**பொறுப்பாளர்,**
"அறப்போர்"
சென்னை-24.

# மாசைத் துடைத்தவன்

(தமிழ்க்கனல்)

இந்த மாதத்தில் எனக்கு ஐந்து ரூபாய் சம்பள உயர்வு தரப்படும் என்ற எனது மேல் அதிகாரியின் உத்தரவை வாங்கிக்கொண்டு அலுவலகத்தில் எனது இடத்தில் வந்தமர்ந்தேன். இக்காலத்தில் ஐந்து ரூபாய் என்பது பெரிய தொகை இல்லைதான். ஆனாலும், அது எதற்குமா பயன்படாது இருக்கும்? இதுவரை எப்படி ஒரு காசும் மிச்சப்படுத்த முடியவில்லையோ, அப்படித்தான் ஐந்து ரூபாய் அதிகமாக வரும் இனிமேலும் ஆகப்போகிறது. நமக்குப் பழைய சம்பளம்தான் இப்போதும் என்று நினைத்துக்கொண்டு, இந்த ஐந்தையும் அப்படியே போஸ்ட்ஆபீசில் "போட்டு"விட்டால்? அப்படிச் செய்தால்கூட என்ன பிரமாதமாகச் சாதிக்கமுடியும்? ஆண்டு முழுவதும் போட்டுக்கொண்டே வந்தால்கூட எவ்வளவு சேரப்போகிறது? "ஐந்து பன்னிரண்டு அறுபது!" சே...கேவலம் ஒரு அறுபதுக்காகவே ஒரு ஆண்டா?ஒருஆண்டுப்பொறுமைக்கு அறுபதுதான் பரிசு என்றால் அது அற்பந்தான்...இந்த ஐந்து ரூபாய்க் குத்தானா செலவில்லாது போகப்போகிறது, இத்தனை நாகரிக உலகில்......!

•

இன்று, சம்பள நாள்...சம்பளம் பெற்றுக்கொண்டேன். ஒரு புதிய ஐந்துரூபாய் நோட்டு. அதைமட்டும் தனியாக எடுத்து விரித்துப்பார்த்தேன். அதிலிருக்கும் படங்கள், முத்திரை முதலியன என்னென்னவோ சொல்லமுயன்றன. "உன்னை நானே வைத்துக்கொள்ளப்போவதில்லை; செலவு செய்து விடப்போகிறேன்" என்றேன் அதைப்பார்த்து. திடீரென்று "எப்படிச் செலவுசெய்வாய்" என்று என் உள்ளம் வினவியது. அந்த ஐந்துரூபாய் நோட்டைப்பார்த்துக் கொண்டிருந்த என்னை, என் உள்ளம் இப்படி வினவியதும், அந்த நோட்டிலிருந்த படம் மறைந்தது. அவ்வூரில் இருந்த நான்கு சினிமாத் தியேட்டர்களும் மாறிமாறி வந்து சென்றன......முடியாது...என்று சொன்னேன்.

அந்தப் படம் கலைந்தது, எப்போதும் 'கலகல' என்ற பேச்சுடன் பலர் உண்டுகொண்டிருக்கும் சிற்றுண்டி விடுதிகளின் தோற்றங்கள் அந்த நோட்டில் வந்துநின்றன...... 'பார்க்கலாம்' என்று முணுமுணுத்தேன். பின்பு அந்தப் படங்களும் கலைந்தன! புதிய துணிக்கடை ஒன்று தெரிந்தது, அந்த நோட்டிற்குள்! செச்சே...ஐந்துரூபாய் அதற்குள் சென்றுவந்தால் என்ன கொண்டுவரமுடியும்? என்றெண்ணினேன். அந்தப் படமும் கலையும்! மனைவி மக்கள்தான் எனக்கில்லையே! இருக்கும் தம்பி, தங்கைகளின் "சப்புக்"கொட்டும் நாக்குகள் வளைந்துவளைந்து ஆடக்கண்டேன். சரி சரி.........கனவுபோதும் என்று அந்த நோட்டை மடித்துப் பையில் வைத்துக்கொண்டேன். என்னென்ன கோட்டைகள்—எண்ணக்கோட்டைகள்!

"என்ன, மதி! இந்த மாதத்திலிருந்து உங்கட்கு 'இன்கிரிமெண்ட்' இல்லே? பேசாமே இன்று மாலை, ஓட்டலுக்குக் கூட்டிப்போயிடுங்க ......" நண்பர் ஒருவரின் 'மிரட்டல்.'

"போமய்யா! உமக்குப் போன மாசம் கிடைச்சுதே! நீர் கூட்டிப் போனீரா?"

"நீர் கேட்டீரா?"

"நீர் கேட்கலே, காப்பி, கேட்டேன். ஆனா, ஏமாத்திவிட்டீர்"

"நீர் என்ன காப்பியோடு திருப்தியடைவீரா? ஒரு வாரத்துக்கு வேண்டியதை ஒரே வேளையில் போட்டு அடைத்துக்கொள்வீரே...சரி சரி... முடிவா என்னதான் சொல்லுறீர்? வரட்டுமா வேண்டாமா?

"வந்து தொலையும்! ஆனால், இங்கேயே சொல்லிடறேன் ஒரே ஒரு காப்பிதான் கிடைக்கும்......பிறகு அங்குவந்து அதுஇது என்று பிடுங்கக்கூடாது"

"வெறுங் காப்பிதானா......ஐயா? ஸ்வீட் வேணுமய்யா, காரம் ஒண்ணுக்கு......"

"இதோ......நான் சொன்னதுக்கு இஷ்டம்னா வாரும்" இதற்குள், அந்த 'நண்பரின்' பையன்வந்து, உடனே அவர்மனைவி வரச்சொன்னதாகச் சொல்ல, பையனுடன் கிளம்பிவிட்டார். 'தப்பித்தோம் சம்பளம் வாங்கினா அன்றைக்குச் சந்தோஷமா இருக்கவிடமாட்டாங்க போலே இருக்கே..." என்று முணுமுணுத்தபடி வழக்கமாகச் சாப்பிடும் ஓட்டலுக்கு வந்தேன்.

ஓட்டல் வாயிலில் கூட்டம், பிச்சைக்காரர் கூட்டம்தான். ஒண்ணாந்தேதியல்லவா? வழக்கத்துக்கு அதிகமாகவே கூட்டம். "மகராசனா இருக்கணும்" "சுகமா இருக்கணும்" என்று "வரம்"தாராளமாக வழங்கிக்கொண்டிருந்தார்கள் அவர்கள். ஓட்டலுக்குள் போவோர் வருவோருக்குத்தான் 'வரம்' தந்தார்களேயன்றித், தாங்கள் என்னவோ 'வரண்டு' இருந்தார்கள். அவர்களைத் துளைத்துக்கொண்டு, உள்ளே போயாக வேண்டுமே என்றெண்ணிக்கொண்டிருந்தபோது, அந்த ஓட்டலில் மேஜை துடைக்கும் பையன் "இந்தா ஆளுக்கு 5 நயா பைசா" என்றபடி ஒவ்வொருவருக்கும் கொடுத்துவர ஆரம்பித்தான். "ஏது, பயல், பிச்சைக்காரனுக்குக் கொடுக்கிற அளவுக்கு?" என்று எண்ணினேன், "ம்... முதலாளிதான் காசைக்கொடுத்துப் பிச்சைக்காரர்கட்குப் போட்டுத் துரத்து என்று சொல்லியிருப்பார்" என்று நினைத்தபடியே ஓட்டலுக்கு உள்ளே சென்றுவிட்டேன். ஒரு சந்தேகம்! 'இப்போ, முதலாளி தந்த காசை, மேசை துடைப்பவன் போட்டானே,

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

இப்போ வர்ர 'புண்ணியம்' மேசை துடைப்பவனுக்கா, அல்லது முதலாளிக்கா?'' தீவிரமாக யோசித்து முடிவெடுக்கவேண்டும். நாள் முழுதும் உழைத்துத் 'தலைவலி சகிதமாக' வந்திருக்கும் நான் யோசிப்பதற்குத் தயாராயில்லை!

மேசை துடைக்கவந்தான்! யார்? முதலாளி காசை வாங்கிப் பிச்சைக்காரர்கட்குத் தர்மம் செய்தவன்! பின்னென்ன, இவனு தனது சொந்தக் காசைப் பிச்சைக்காரர்கட்குத் தருவான்? அப்படி இருந்தாலும், இவன் இருக்கும் நிலைமைக்குத் தர்மம் வேறு அழுகிறதா...'' என்றெல்லாம் எண்ணம் ஓடியது. அவனை நிமிர்ந்து பார்த்தேன்! அடேயப்பா, என்னமோ தெரியவில்லை இன்று புன்சிரிப்பு! வெத்திலை பாக்கு அரைத்துச் சிவந்தவாய்! எப்போதும் வாரப்படாதிருந்த தலைமுடி வாரப்பட்டிருந்தது! ''சலாம் சார்!'' என்றான் என்னைப் பார்த்தபடி. ''சலாம்'' என்று முணுமுணுத்தேன். ''சரி சரி ......ஒண்ணாந்தேதியல்லவா? பயல் இனுமுக்கு அடிபோடுகிறான்'' என்று நினைத்தேன். சட்டைப் பையில் ஏதோ சில்லரைகள் இருப்பது தெரிந்தது. ''சரி சரி, யார் யாரிடமோ இனும் வாங்கி இருக்கிறான், அது தான் சட்டைப்பையில் இருப்பது, நம்மிடமும் வாங்கிவிடுவான்போல் இருக்கிறதே'' என்றெண்ணினேன். ''ஒரு வேளை முதலாளி, பிச்சைக்காரர்கட்குத் தரும்படி கொடுத்ததில் பாதி கொடுத்துவிட்டுப் பாதியை வைத்துக்கொண்டானே? எப்படியும் குறைந்தது எட்டணாவாவது இருக்கும்; அதுதான் மகிழ்ச்சியாக இருக்கிறான்'' என்று நினைத்துக்கொண்டிருந்தேன். மேஜையை அழுத்தி அழுத்தி இரண்டு மூன்று முறை துடைத்தான்! ''நமக்கு 5 ரூபாய் உயர்வு கிடைத்திருப்பது பயலுக்கு யாரோ சொல்லிவிட்டார்கள்போல் இருக்கிறது. பயல் இன்றைக்கு இரங்காமல் விடமாட்டான்போல் வருக்கிறது.'' என்று நினைத்தபடியே சப்ளையர்டம் ஒரு காப்பி மட்டும் ஆர்டர் கொடுத்தேன்.

''ஏன் சார் டிபன் ஒன்றும் சாப்பிடவில்லையா?'' என்றான் மேசை துடைப்பவன்.

''இல்லே''

''இன்னிக்கு ஒண்ணாந்தேதி ஆச்சுங்களே...'புல்லா' சாப்பிடுங்களே'' என்றான். நான் நினைத்தபடிதான் ஆகும்போல் இருந்தது. அதாவது, இன்னிக்குச் சம்பள நாள் ஆச்சே, 'புல்லா' சாப்பிடுங்கோ என்பான். சிறிது நேரம் கழித்து ''இன்னிக்கு சம்பள நாள் ஆச்சே; எனக்கு ஒரு நாலணு கொடுத்தால் என்ன என்று கேட்கமாட்டானு? அல்லது 'இன்கிரிமெண்ட்'தான் 5 ரூபாய் வாங்கி இருக்கிறீர்களே, ஒரு நாலணு கொடுக்கக்கூடாதா என்று கேட்காமலா இருப்பான்! சே சே எங்கே போனுலும் ஒரே 'பிடுங்கல்'தான்'' என்று மனதுள் எண்ணியவாறு இருந்தேன்.

காப்பி வந்தது. ஆற்றிக்கொண்டிருந்தேன். மேஜை துடைப்பவன் சப்ளையரிடம் என்னைப் பார்த்தபடியே என்னவோ ''காதோடு காதாகப்'' பேசிக்கொண்டிருந்தான். ''என்ன எழவு பேசுகிறானே? ஒருவேளை, எனக்குச் சம்பள உயர்வு கிடைத்ததை அவனிடமும் சொல்லி நீயும் அவரை ''சம்திங்'' கேள் என்கிறானே? இப்படிச் சுரண்டத் திட்டமிடுகிறானே! சேசே இன்னிக்கு ஓட்டல் பக்கமே வந்திருக்கப்படாது'' என்று கூறியவாறே, அதற்குள் ஆறிப்போன காப்பியை வாயில் ஊற்றிக்கொண்டேன். எழுந்து போகும் சமயம். மேஜை துடைப்பவன், சப்ளையர் கொடுத்த ''பில்லை'' வாங்கிக்கொண்டு வந்தான்.

''சார், இன்னிக்கு உங்க பில் என் கணக்கில்'' என்றான் மேஜை துடைப்பவன். நான் சற்றுத் திகைத்து நின்றுவிட்டேன். ''இன்னிக்கு என் பில் உங்க கணக்கிலே'' என்பதை மாற்றிச் சொல்லிவிட்டான்போல் இருக்கிறது என்று நினைத்தேன். ''என்ன சொல்றே'' என்றேன்.

''நீங்க இன்னிக்குப் பில்லுக்குப் பணம் தராதீங்க; நானே தந்திடறேன்'' என்றான்.

''ஏண்டாப்பா?''

''இன்னியிலிருந்து, முதலாளி, எனக்கு மாதா மாதம் மூணு ரூபாய் சேர்த்துத் தர்ரேன்னு சொல்லி இருக்காரு அதனுலேதான்......''

வெளியில் புறப்பட இருந்த நான் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டேன்.

அவனது புதுத்தோற்றம், பரவசமான நிலை, மகிழ்ச்சி முகம் ஆகியவற்றைக் கண்ட நான் என்னிடம் பிடுங்க இவ்வையெல்லாம் நடிப்பு என்றெண்ணினேன். ஆனுல், இப்போதுதான் தெரிகிறது. அவனது பழைய சம்பளமே பத்து ரூபாய் தான். இப்போது ஒரு மூன்று அதிகம். அதிலேயே ஒரு அன்பளிப்பு! ஆனுல் நான்...எனது பழைய சம்பளம் நூற்றைம்பது. இப்போது ஒரு ஐந்து அதிகம்; ஆனுலும், எவன் ''பிடுங்கிக்''விடுவானே என்ற 'அச்சம்' 'குருடு கூன்'களுக்குக் கொடுக்கவும் மனம் இல்லாத போக்கு. எனக்கு இன்னும் ஐம்பது ரூபாய் உயர்ந்தால்கூட ஏழைகட்கும் இயலாதவர்கட்கும் உதவமாட்டேன். அப்படி இருந்தது என் மனம்!

மேஜை துடைப்பவன், என் உள்ளத்து மாசையும் சற்றே துடைத்துவிட்டான்.

ஓட்டலைவிட்டுக் கிளம்பத் தயாரானேன். என்னை ''மகராசா, சாமி'' என்றெல்லாம் புகழ்பாடக் காத்திருக்கும் பிச்சைகாரர்கட்குத் தருவதற்காக இரண்டிரண்டு காசுகளாக நான்கைந்து நாணயங்களைப் பொறுக்கிக் கையில் பிடித்தபடி வெளியே வந்தேன் — அவர்களின் முகங்களும், மலர்ந்தன. பிச்சையிடுவதின் பெருமை அந்த மலர்ச்சியில் கதிர் வீசிற்று. ஒரு ஆண்டுக்கு ஒருமுறை — அதாவது, இனி, அடுத்த ஆண்டு சம்பள உயர்வு கிடைக்கும்போதும் இதுபோலச் செய்வது என்ற உறுதியுடன் அங்கிருந்து புறப்பட்டேன். ★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, ''திராவிட நாடு'' அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.